# புதிய வடிவில் சிறிய தேர்தல்

"புதிய உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் சட்டம் பற்றிய ஓர் அறிமுகம்"




Kingdom of the Netherlands

PAFFREL

# புதிய வடிவில் சிறிய தேர்தல்

புதிய உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் பற்றிய ஓர் அறிமுகம்

# புதிய வடிவில் சிறிய தேர்தல்

## புதிய உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் பற்றிய ஓர் அறிமுகம்

**வெளியீடு**
ப.ஃ.வ்ரல்

புதிய வடிவில் சிறிய தேர்தல்

புதிய உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் பற்றிய
ஓர் அறிமுகம்

முதல் பதிப்பு: 2018 ஜனவரி

ISBN 978-955-4082-03-8

**ஆக்கம்:**

சட்டத்தரணி ஜகத் லியன ஆரச்சி
LL.B (Colombo). MA(Mass Communication-Kelaniya)

பக்க வடிவமைப்பு – ப.ஃ.வ்ரல் ஊடகப்பிரிவு

**ப.ஃ.வ்ரல் வெளியீடு**
12/3,
றொபற் ரெரஸ், றொபற் ரெரஸ்,
கொழும்பு 06.

**அச்சு**
Ditect Printers
318, Biyagama Road, Pattiya
Kelaniya.

# முன்னுரை

உள்ளூராட்சியின் வரலாறு விஜய மன்னனின் வருகையைத் தொடர்ந்து பண்டைய குடியிருப்புக்களின் தோற்றம் வரை நீண்டு சென்ற போதும், பிரித்தானியரின் வருகையின் பின்னரே உளளூராட்சி கட்டமைப்பு உருவாக்கம் பெற்றது. இடைப்பட்ட கால நிலைமைகளில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் மத்தியில் அவ்வப்போது உலாவந்த சொல் மந்திரி. தமது பிரதேசத்தின் பிரதிநிதியை மக்கள் மந்திரி என்றே அழைத்தனர். ஆங்கிலத்தில் என அறியப்பட்ட சொல் எம்மவர்களால் மந்திரி என அழைக்கப்பட்டது.

பிற்பட்ட காலத்தில் கிராம சபைக்குப் பதிலாக பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை உருவாகியது. பிரதேச சபையை பிரதிநிதித்துவம் செய்த நபர் மக்களால் பிரதேச சபை உறுப்பினர் என அழைக்கப்பட்டார். இவர் பிரதேச சபை, நகர சபை மற்றும் ஆளுகைப் பிரதேசத்திற்கு பொறுப்புக் கூறும் நபராக இருந்த காரணத்தினால் தமது வட்டாரத்திற்கு பொறுப்புக் கூறும் கடப்பாட்டிலிருந்து விலகும் நிலை உருவாகியது. விருப்பு வாக்குகளைப் பெற்று தெரிவானவர் சிறியதொரு பிரதேசத்திற்கு அன்றி ஒட்டுமொத்த ஆளுகைப் பிரதேசத்திற்கும் பொறுப்புக் கூறும் அல்லது பிரதிநிதித்துவம் செய்யும் நபராக காணப்பட்டார். இதன் விளைவாக கிராமத்திற்கு பொறுப்பு கூறும் உறுப்பினர் இழக்கப்பட்டு விருப்பு வாக்கின் மூலம் தெரிவாகும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதன் சாதக பாதக நிலைமைகளை 40 வருடங்களுக்கு மேலாக நாம் அனுபவித்து வருகின்றோம்.

இப்பின்னணியில் இலங்கையிலுள்ள அறிஞர்களும், சிவில் சமூக அமைப்புக்களும் இந்த தேர்தல் முறைமையிலுள்ள சாதக பாதக நிலைமைகளை உய்த்தறிந்து ஆரம்பித்து வைத்த சொல்லாடல் புதிய உளளூராட்சி தேர்தல் முறையொன்றுக்கு வழி வகுத்துள்ளது. அந்த வகையில் நாம் உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள உள்ளோம். அத் தேர்தலில் நமது கிராமத்திற்கு பொறுப்பு கூறும் மக்கள் பிரதிநிதி கிடைப்பது இத்தேர்தல் முறையில் உள்ள சிறப்பம்பசமாகும். அதே போல் பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட்டு அதற்கான சட்ட ரீதியான அங்கீகாரமும் கிடைத்துள்ளது. இதனால் கிராமத்திற்கு பொறுப்பு கூறும் பிரதிநிதி ஒருவரின் தேவை பூர்த்தி செய்யப்படுவதும், அந்த பிரதிநிதி கிராமத்திற்கு பொறுப்பு கூறுவதும், அளிக்கப்படும் வாக்கு ஒவ்வொன்றுக்கும் பெறுமதி கிடைப்பதும் அத்துடன் விருப்பு வாக்குச் சண்டையில் ஏற்படும் பாதகமான நிலைமைகள் தவிர்க்கப்படும் எனவும் நம்பப்படுகின்றது.

மேலும் சிறந்த பிரதிநிதியை தெரிவு செய்ய வாக்காளர்களை விழிப்புணர்வு செய்ய வேண்டியது அவசியமாக இருப்பதன் காரணமாக ப.ஃ.வ்ரல் அமைப்பு அடிக்கடி வாக்காளர்களை விழிப்புணர்வு செய்வது பொறுப்பு வாய்ந்த பணி என கருதுகின்றது.

இந்த நோக்கத்தை முதன்மைப் படுத்தி புதிய உள்ளூராட்சித் தேர்தல் மட்டும் தகுதியான வேட்பாளர்களை தெரிவு செய்ய வழிகாட்டும் “புதிய வடிவில் சிறிய தேர்தல்” நூலை உங்களுக்கு சமர்ப்பணம் செய்கிறோம்.

உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | உள்ளூராட்சி மற்றும் உள்ளூர்திகார சபைகள் தேர்தலின் வளர்ச்சி | 01 - 06 |
| 2. | இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்களும் மக்கள் பிரதிநிதிகளும் | 07 - 08 |
| 3. | புதிய உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் முறையின் சிறப்பம்சங்கள் | 09 - 11 |
| 4. | வாக்கெடுப்பின் மூலம் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல் | 12 - 14 |
| 5. | உள்ளூர் அதிகார நிறுவனங்களுக்கான வேட்புமனுத் தாக்கல் | 15 - 20 |
| 6. | தேர்தல் பிரசாரம் | 21 - 25 |
| 7. | வாக்கெடுப்புத் திகதியும் வாக்களிப்பும் | 26 - 31 |
| 8. | வாக்கெண்ணுதல் | 32 - 34 |
| 9. | உள்ளூரதிகார நிறுவனங்களை அமைத்தல் | 35 - 36 |
| 10. | உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுடன் தொடர்புடைய தவறுகளும் ஊழல்களும் | 37 - 42 |
| 11. | உள்ளூராட்சி உறுப்பினரின் கடமைகள் | 43 - 46 |
| 12. | மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான அளவுகோள்கள் | 47 - 50 |

# 01
# உள்;ராட்சி மற்றும் உள்;ர் அதிகார சபைகள் தேர்தலின் வளர்ச்சி
# இலங்கையில் உள்;ர் அதிகார சபைகளின் வளர்ச்சி

**மன்னர் காலம்**

எமது நாடு உள்ளூராட்சி பற்றிய நீண்டகால அனுபவத்தையும் பயன்பாட்டையும் கொண்டிருந்தமைக்கு எமது வரலாற்று மூலாதாரங்கள் சான்றாக உள்ளன. நான்காம் நூற்றாண்டிலிருந்து நகர நிருவாகத்திற்காக 'நகர குத்திக' எனப்படும் ஒரு பதவி இருந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. அதேபோல், கிராமிய மட்டத்தில் கிராமியத் தலைவர்களால் கொண்டு நடாத்தப்பட்ட கிரா-மசபை முறையும் இருந்துள்ளது. இந்தக் கிராமசபை, நிருவாகம் மற்றும் பிணக்குகளைத் தீர்த்தல், சிறிய குற்றங்கள் பற்றிய வழக்குகளைத் தீர்த்தல், தண்டனை வழங்கும் பணியையும் மேற்கொண்டது.

குறிப்பாக கமத்தொழிலைப் பிரதானமாகக் கொண்ட சமூகத்தில் அதனோடு இணைந்த நிருவாக நடவடிக்கைகள் கிராமசபையால் நிறைவேற்றப்பட்டதுடன், விசேடமாக உணவுப் பாதுகாப்புத் தொடர்பில் கிராம சபை விசேட கவனம் செலுத்தியுள்ளது. இதற்கான அதிகாரம் பாரம்பரியமாக பண்பாளர்களிடமே வழங்கப்பட்டது. மக்கள் பிரதிநிதிகளிடம் அல்ல. இது பெரும்பாலும் பரம்பரை வழிவந்த ஒரு பதவியாக இருந்தது. அதேபோல மன்னர் ஆட்சியிலிருந்து பெரிதும் அன்னியப்பட்டிருந்த சுயாட்சி அலகாக இருந்தது.

**பிரித்தானியர் காலம் 1818 - 1948**

தொன்மையான வரலாறு கொண்ட அதேபோல் படிமுறையாக வளர்ச்சி கண்டிருந்த உள்ளூராட்சி நிறுவனக் கட்டமைப்பு 1818 மார்ச்சில் கண்டி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதையடுத்து இரத்தானது. அதனால் உள்ளூராட்சி நடவடிக்கைகளில் சுதேசிகளுக்கு இடையீடு செய்ய முடியாத நிலை உருவானது.

## 1856

சர் ஹென்ரி வோட் தேசாதிபதியின் காலத்தில் 1956ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டம் கொண்டு வரப்பட்டதோடு, அதன் ஊடாக விவசாயத்திற்கு மீண்டும் உயிர்ப்பூட்டுவதற்கும் நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கும் கிராம சபைகள் அமைக்கப்பட்டன. இவை மன்னர் காலத்தில் இருந்த கிராம சபைகள் போலன்றி, சட்ட அதிகாரத்தைக்

கொண்ட உள்ளூராட்சி அலகுகளாகக் காணப்பட்டன.

## 1965

1965ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மாநகர சபைகள் சட்டத்தின் கீழ் 1965இல் கொழும்பு மற்றும் கண்டி நகர சபைகளும் 1886இல் காலி நகர சபையும் அமைக்கப்பட்டன.

## 1871

றொபின்சன் தேசாதிபதியினால் கிராமிய சமூக கட்டளைச் சட்டம் (Village Community Ordinance) கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து கிராமிய சபைகளுக்கு மீண்டும் சட்ட வடிவம் கொடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் இவை கிராமியக் குழுக்களாகவும் பின்னர் கிராமிய பணிகள் சபைகளாகவும் அழைக்கப்பட்டன. குறித்த ஒரு பிரதேசத்தில் கிராமத்தவர்கள் 10 பேரின் வேண்டுகோளின் பேரில் தேசாதிபதி மற்றும் பாராளுமன்றத்தால் (சட்டவாக்கம்) கிராமிய குழுவொன்று அமைக்கப்பட்டு, அதிகாரம் பெற்ற முகவர் அதன் தலைவரானார். இக்குழு நிருவாக நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கும் சிறு குற்றச் செயல்கள் தொடர்பிலான நியாயாதிக்கத்தையும் கொண்டிருந்தன. இவை கிராமசபை நீதிமன்றங்கள் எனவும் அறியப்பட்டன.

## 1884

கிராமியக் குழுக்கள் கட்டளைச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி அக்குழுக்களின் தலைவராக கிராமத் தலைவர் பதவி வழியில் தெரிவுசெய்யப்படுவார்.

## 1892

சிறுநகர துப்புரவேற்பாட்டுக் கட்டளைச் சட்டத்தின் (1992ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க) கீழ் ஒரு மாவட்டத்திற்கு ஒரு துப்புரவேற்பாட்டுக் குழு வீதம் அமைக்கப்பட்டது,

**1898**

1898ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உள்ளூராட்சி சபைக் கட்டளைச் சட்டம் (Local Board Ordinance) படி அமைக்கப்பட்ட உள்;ராட்சி சபையானது மூன்று உத்தியோகபூர்வ அங்கத்தவர்களையும் மூன்று உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களையும் கொண்டிருந்தது. உதவி முகவர் பொதுப்பணி அலுவலர், வைத்திய உத்தியோகத்தர் (சிவில்) ஆகியோர் உத்தியோகபூர்வ அங்கத்தவர்களாகவும் 1000 ரூபாவுக்கும் அதிகமான சொத்தைத் தம்வசம் வைத்திருந்த மற்றும் ஏற்கெனவே தவறு எதனையும் புரிந்திராத பிரதேசவாசிகள் மூவர் உத்தியோகபூர்வ அங்கத்தவர்களின் வாக்கின் மூலம் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன்கீழ் நகரமொன்றுக்கு ஓர் உள்ளூராட்சி சபை வீதம் அமைக்கப்பட்டது.

**1939**

1939ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க நகர சபைகள் (Urban Council) சட்டத்தின் கீழ் ஓரளவுக்குப் பெரிய நகரங்களில் நகர சபைகள் அமைக்கப்பட்டன.

**1946**

சிறிய நகரங்களில் 1946ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பட்டின ஆட்சிமன்றம் (Town Council) சட்டத்தின் கீழ் சிறிய பட்டின சபைகள் அமைக்கப்பட்டன.

**சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலம் - 1948 இலிருந்து 1980**

இலங்கையில் உள்ளூராட்சித் துறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி கிராமிய பணிகள், நகர சபைகள் மற்றும் பட்டின சபைகள் யாவும் கலைக்கப்பட்டு, அவை மாவட்ட அபிவிருத்திச் சபைகளுடன் இணைக்கப்பட்ட உப அலுவலகங்களாக மாற்றப்பட்டன. மேலும், கிராமியப் பிரதேசங்களில் கிராமோதயக்குழுக்கள்

அமைக்கப்பட்டு உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

**1987**

அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தின்கீழ் மாகாண சபைகள் அமைக்கப்பட்டதன் பின்னர் உள்ளூராட்சி பன்முகப்படுத்தப்பட்ட ஒரு விடயப் பரப்பாக மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டது. உள்ராட்சி அமைச்சு ஒழுங்குபடுத்தலுக்கும் தேசிய கொள்கைகளுக்குமென ஒதுக்கப்பட்டது.

**இலங்கையில் இன்று மூன்று வகையான உள்ளூராட்சி நிறுவனங்கள் காணப்படுகின்றன.**

1. மாநகர சபைகள்
2. நகர சபைகள்
3. பிரதேச சபைகள்

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்

ஆரம்ப காலத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்கள் பதவி வழியாகவும் நியமனம் மூலமாகவும் தெரிவு செய்யப்பட்டபோதும் பின்னர் அது உரிய ஆளுகைப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் வாக்குகள் மூலம் தெரிவு செய்யும் நிலையை நோக்கி வளர்ச்சி கண்டது. சமகாலத்தில் 262ஆம் அத்தியாயமான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டம் அதற்கான சட்ட ஆவணமாக உள்ளது.

இதற்கான ஆரம்பச் சட்டம் 1947ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டதோடு, 2017 டிசம்பர் மாதம் வரை இச்சட்டத்திற்கு 20 திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆகவே, இச்சட்டதினுடைய ஆரம்பத் தோற்றம் முற்றிலும் மாறுபட்டுள்ளது. இவ்வாறு கொண்டுவரப்பட்ட திருத்தங்களில் சில முக்கியமான திருத்தங்களும் காணப்படுகின்றன. அவையாவன,

### தொகுதிவாரி முறையிலிருந்து விகிதாசார முறைக்குச் செல்லல்.

ஆரம்ப காலத்தில் உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் தொகுதிவாரி முறைப்படி நடாத்தப்பட்டது. அதன்படி 1977ஆம் ஆண்டு வரை நடாத்தப்பட்ட தேர்தல்கள் தொகுதிக்கான உறுப்பினரைத் தெரிவுசெய்யும் முறையில் இருந்தன. சம்பந்தப்பட்ட தொகுதியில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. பாராளுமன்றத்திற்கு விகிதாசார பிரதிநிதித்துவம் அறிமுகஞ் செய்யப்பட்டதைத் தொடர்ந்து

உள்ளூர் அதிகார நிறுவனங்களுக்கும் அதேமுறை அறிமுகஞ் செய்யப்பட்டது. அதன்படி 1979ஆம் ஆண்டில் மாநகர சபைகளுக்கும் நகர சபைகளுக்குமான தேர்தல் முதல் முறையாக விகிதாசார முறையின்கீழ் நடாத்தப்பட்டது.

## விருப்பு வாக்குமுறை அறிமுகம்

1979ஆம் ஆண்டில் உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் நடாத்தப்பட்டபோதும் விருப்பு வாக்குப் பயன்படுத்தப்படவில்லை. விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மற்றும் விருப்புவாக்கு முறையின் கீழான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்காக 1991ஆம் ஆண்டு நடாத்தப்பட்டது. அதேபோல அது ஒரே தினத்தில் நடாத்தப்பட்ட உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் என்ற பதிவையும் பெற்றது.

## இளைஞர் வேட்பாளர்கள் கட்டாயமாக்கப்படல்

மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஏனைய நிறுவனங்களைப் போன்றே உள்ளூர் அதிகார நிறுவனங்களிலும் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவே காணப்பட்டது. இதனால் இளைஞர்கள் உள்ளூர் அதிகார சபைகளில் புறக்கணிக்கப்படும் நிலை தென்பட்டது. 1990இல் அமைக்கப்பட்ட திருப்தியற்ற இளைஞர்கள் தொடர்பான குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் உள்ளூர் அதிகார சபை வேட்பாளர் பட்டியலிலும் 1/3 பங்கினர் 40 வயதிலும் குறைந்த வேட்பாளர்களாக இருக்க வேண்டும் என்ற ஏற்பாடு சேர்க்கப்பட்டது.

## கலப்புத் தேர்தல் முறை அறிமுகம்

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆரம்ப காலத்தில் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொகுதிவாரி முறையில் நடத்தப்பட்டதோடு, பின்னர் 1979ஆம் ஆண்டிலிருந்து விகிதாசார முறையில் நடாத்தப்பட்டது. இவ்விரு முறைகளிலும் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி, சாதகமான அம்சங்கள் வெளிப்படும் வகையில் தொகுதிவாரி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஆகிய இரண்டு முறைகளையும் கொண்ட கலப்புத் தேர்தல் முறை 2012ஆம் ஆண்டில் அறிமுகஞ் செய்யப்பட்டது. தொடக்கத்தில் தொகுதிவாரி முறையின்கீழ் உள்ளூராட்சி உறுப்பினர்களில் 70□ மும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின்கீழ் எஞ்சிய 30□ தையும் தெரிவு செய்யவிருந்தபோதும், 2017இல் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் மூலம் இந்த எண்ணிக்கை 60மூ□ மற்றும் 40□ ஆக மாற்றப்பட்டது.

## பெண்களின் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்படல்

இலங்கையில் இதுவரை காலமும் நடாத்தப்பட்ட எந்தவொரு தேர்தலிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் சட்டத்திற்கு 2017ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தில் அதற்கான ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அதன்படி, உள்ளூராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ¼ பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தல் வேண்டும்.

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை நடாத்தும் பொறுப்பு தேர்தல் திணைக்களத்திற்கு

ஆரம்ப காலத்தில் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் உள்ளூராட்சி ஆணையாளரால் நடாத்தப்பட்டது. பின்னர் தேர்தல் திணைக்களத்திடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதுடன், அரசியலமைப்புத் திருத்தம் மூலம் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை நடாத்தும் பொறுப்பு தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

# 02

# இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்களும் மக்கள் பிரதிநிதிகளும்

## இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்கள்

மேற்படி அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளவாறு இலங்கையில் வளர்ச்சி கண்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களை 03 வகைப்படுத்தலாம். அவையாவன,

- ◈ பிரதேச சபைகள் - 24
- ◈ நகர சபைகள் - 41
- ◈ மாநகர சபைகள் - 276

2018 ஜனவரி மாதமளவில் இலங்கையில் நடைமுறையிலுள்ள ஒட்டுமொத்த உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை 341 ஆகும்.

## உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டாரங்கள்

2012ஆம் ஆண்டில் உள்;ர் அதிகார சபைகள் தேர்தல் சட்டத்திலும் மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் சட்டத்திலும் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களினால் சகல உள்ளூராட்சி நிறுவனங்களும் வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் மக்கள் பிரதிநிதி ஒருவர் வீதம் தெரிவு செய்யப்படுவதோடு, இன ரீதியில் பன்முகத் தன்மை கொண்ட ஒரு சில வட்டாரங்களில் இரண்டு அல்லது மூன்று பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

## வட்டார எல்லை நிர்ணயம்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் சட்டத்தில் 2012இல் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பிலான எல்லை நிர்ணயத்திற்க-ாக எல்லை நிர்ணயக் குழுவொன்றை நியமிக்க வேண்டும். விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் இக்குழு அமைக்கப்படும். இக்குழு உள்ளூராட்சி நிறுவனங்களின் எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ளும்போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

- ◈ சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவன ஆளுகைப் பிரதேசத்தின் இன விகிதாசாரம் மற்றும் அந்த இன விகிதாசாரத்தின் அடிப்படையில் அமைந்த பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தல்.

- ◈ உள்ளூராட்சி நிறுவனத்தின் புவியியல் பிரதேசமும் அதன் பௌதிக இயல்புகளும்.
- ◈ உள்ளூராட்சி நிறுவன ஆளுகைப் பிரதேசத்தின் சனத்தொகையும் சனத்தொகை அடர்த்தியும்.
- ◈ உள்ளூராட்சி நிறுவன ஆளுகைப் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தி மட்டம்.

2012இல் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி, உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக திரு. ஜயலத் ரவி திஸாநாயக்கவின் தலைமையிலான குழு 2013இல் அமைக்கப்பட்டது. 2015இல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் குறித்த குழுவின் அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஜனாதிபதியினால் இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமான அறிவித்தல் 2015 ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி வெளியிடப்பட்டது.

மேற்படி எல்லை நிர்ணயம் தொடர்பாக பாரிய எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதால், சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால்

திரு. அசோக பீரிஸ் தலைமையிலான உள்ளூராட்சி எல்லை நிர்ணயம் தொடர்பான மீளாய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையை தரப்பெற்ற எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானப் பத்திரிகை 2017 பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்டது.

**இவ்விரு வர்த்தமானப் பத்திரிகைகளையும் ஆராயும் போது நாட்டிலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக,**

- ◈ ஓர் உறுப்பினரைக் கொண்ட 4750 வட்டாரங்களும்
- ◈ இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட 165 வட்டாரங்களும்
- ◈ மூன்று உறுப்பினர்களைக் கொண்ட 4 வட்டாரங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

அதன்படி, வட்டார மட்டத்தில் 5092 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

2017இல் மேற்கொள்ளப்பட்ட 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின்படி படிமுறையில் உள்ளூர் அதிகார சபைகளுக்காக வட்டார முறையில் 60□ உறுப்பினர்களும் விகிதாசார முறையில் 40□ உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளதால் அடுத்துவரும் தேர்தலில் தெரிவுசெய்யப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 8353 ஆகும்.

03

# உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் முறையின் சிறப்பம்சங்கள்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்திற்கு 2012 தொடக்கம் 2017 டிசம்பர் வரை கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் காரணமாக உள்;ராட்சித் தேர்தல் முறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

- 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டம்
- 2016ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டம்
- 2017ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டம்
- 2017ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டம்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் காரணமாக இறுதியாக நடாத்தப்பட்ட

உள்ளூராட்சித் தேர்தலைவிட பல சிறப்பம்சங்களைக் கொண்ட ஒரு தேர்தல் முறையில் அடுத்துவரும் தேர்தல் நடாத்தப்படவுள்ளது. அவையாவன –

**i. வட்டார மற்றும் விகிதாசார முறை கலந்த தேல்தல் முறையின் கீழ் தேர்தல் நடதப்படுகின்றமை**

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் பிரதேசத்திற்கு ஓர் உறுப்பினர் கிடைக்கக்கூடிய விதமாகக் காணப்பட்டது. தமது உள்ளூராட்சித் தொகுதியைச் சேர்ந்த பிரதிநிதியைக் கிராமத்தவர்கள் “மந்திரி” என்றே அழைத்தனர். சம்பந்தப்பட்ட தொகுதியின் சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்புக்கூறும் நபராக இந்த மந்திரி என்று அழைக்கப்பட்ட தொகுதிக்கான பிரதிநிதி இருந்து வந்துள்ளார். உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விகிதாசார முறை அறிமுகஞ் செய்யப்பட்டதையடுத்து தொகுதிக்குப் பொறுப்புக்கூறும் பிரதிநிதியை இழக்கும் நிலை உருவானது. இருப்பினும், அதற்குப் பதிலாக அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் பெறுமதியானதாகக் கருதப்பட்டது.

ஏற்கெனவே காணப்பட்ட முறைப்படி வெற்றிபெறும் தொகுதி வேட்பாளருக்கு மட்டும் வாக்களிக்க சந்தர்ப்பம் கிடைத்ததோடு, விகிதாசார பிரதிநிதித்துவ முறையால் ஒவ்வொரு வாக்கும் பெறுமதியானதாகக் கருதப்பட்டு உள்ளூராட்சி நிறுவனத்திற்குக் கிடைக்கும் முழு மொத்த வாக்குகளுக்கு நிகராக பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் முறை கொண்டுவரப்பட்டது.

தொகுதிவாரி முறையிலும் விகிதாசார முறையிலும் காணப்படும் சாதகமான அம்சங்கள் உள்ளடக்கப்படுகின்ற மற்றும் விருப்பு வாக்குச் சண்டையை ஒழிக்கும் கலப்பு முறையாக வட்டார முறையின் கீழ் 60% உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கும் எஞ்சிய 40% ஐ விகிதாசார முறையின் கீழ் தெரிவு செய்வதற்கும் தேர்தல் நடாத்தப்படுகின்றது.

### ii. பெண்களின் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்படல்

நாட்டிலுள்ள வாக்காளர்களில் 52% பெண்களாக உள்ளபோதும், மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நிறுவனங்களில் பெண்களின் பிரதிநித்துவம் மிகவும் குறைவாகவே உள்ளது. இவ்வாறாக உள்ளவர்களிலும் அநேகமானோர் தமது தந்தை அல்லது கணவர் தந்த வாய்ப்பின் நிமித்தமாகவே அரசியலுக்கு வந்துள்ளனர். பெண்கள் அரசியலுக்கு வர சரியானதொரு வழிமுறை இல்லாத நிலையும், இருக்கின்ற அரசியல் ஒழுங்குமுறை பெண்களை அரசியலிலிருந்து அன்னியப்படுதுவதுமாக உள்ளது. இதன் காரணமாக பெரும்பாலான நாடுகளில் நடைமுறையில் உள்ளதைப்போல் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 2016இல் உள்;ர் அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தல் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் காரணமாக ஒவ்வொரு மாகாண சபைக்குமுரிய வேட்பாளர்களின் எண்ணிக்கையில் 25% பெண்களாக இருப்பார்கள்.

### iii. விருப்பு வாக்குமுறை இரத்துச் செய்யப்படுகிறது

தற்போதைய அரசியல் சூழ்நிலைமையில் பெரும்பாலானோர் விருப்பு வாக்கு முறையை வெறுக்கின்றனர். ஒருசிலர் இதை விருப்பு வாக்குச் சண்டை என்கின்றனர். சில நல்லவர்கள் அரசியலில் களமிறங்குவதை பலவீனப்படும் முறையாக விருப்பு வாக்குமுறை இனங் காணப்பட்டுள்ளது. ஒரே கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களிடையே ஏற்படுகின்ற தேவையற்ற சச்சரவுகள் சபையில் பாரிய கருத்து வேறுபாட்டை ஏற்படுத்துவது சாதாரண நிகழ்வாகிவிட்டது. விருப்பு வாக்கு இல்லாத புதிய தேர்தல் முறை அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. வாக்காளர் தாம் விரும்பிய கட்சி அல்லது சுயேச்சைக் குழுவுக்கு மட்டுமே வாக்களிக்க முடியும்.

### iv. வாக்களிப்பு நிலையத்திலேயே வாக்குகள் எண்ணப்படும்

வாக்களிப்பு நிலையத்தில் வாக்குகள் எண்ணப்படுதல் புதிய உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் முறையில் காணப்படும் மற்றுமொரு சிறப்பம்சமாகும். இதுவரை காலமும் மாவட்ட வாக்கெண்ணும் நிலையங்களிலேயே வாக்குகள் எண்ணப்பட்டன.

வாக்கெடுப்பு நிலையம் ஒவ்வொன்றிலும் முடிவுகள் அறிவிக்கப்படமாட்டாது. அதேபோல் முடிவுகள் அறிவிக்கப்படவேண்டிய ஒரேயொரு வாக்கெடுப்பு நிலையத்தை மட்டும் கொண்டுள்ள வட்டாரங்கள் தொடர்பாக முன்கூட்டியே இனம் காணப்படும். ஏனைய வாக்கெடுப்பு நிலையங்களின் (வாக்கெண்ணும் நிலையங்களின்) முடிவுகள் அந்த நிலையத்திற்கு அறிவிக்கப்படுவதோடு, தபால்மூல வாக்குகளும் அதேநிலையத்தில் எண்ணப்படும். அதன் முடிவுகளின்படி தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் யார் என்பது இறுதியில் அதேநிலையத்தில் அறிவிக்கப்படும்

### v. வேட்புமனுவில் இளைஞர் பிரதிநிதித்துவம் கட்டாயமற்றது

1990 இலிருந்து உள்ளூராட்சித் தேர்தலொன்றுக்கான வேட்புமனுவைச் சமர்ப்பிக்கும்போது உள்ளடக்கப்படும் எண்ணிக்கையில் 40 சதவீதமானோர் 35 வயதிலும் குறைவானவர்களாக இருக்க வேணடும். புதிய தேர்தல் முறையில் கட்டாய இளைஞர் பிரதிநிதித்துவம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

# 04.
# வாக்கெடுப்பின் மூலம் உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் முறை

**புதிய உள்ளூார் அதிகாரசபைகள் சட்டத்தின்படி 04 வகையான உறுப்பி-னர்கள் தெரிவுசெய்யப்படுவர்.**

**I.** தனி அங்கத்தவர் வட்டார உறுப்பினர்கள்

**II.** பல் அங்கத்தவர் வட்டாரஉறுப்பினர்கள்

**III.** விகிதாசார முறையில் தெரிவாகும் உறுப்பினர்கள்

**IV.** கட்டாய பெண் உறுப்பினர்கள்.

ஆகவே, ஒவ்வோர் உறுப்பினரும் தெரிவுசெய்யப்படும் விதம் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக உள்ளது.

### I. தனி அங்கத்தவர் வட்டார உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல்.

தனிஅங்கத்தவர் வட்டாரங்களில் வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின்

வேட்பாளர் அந்தவட்டாரத்தில் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்தை-தப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படுவார்.

### II. பல் அங்கத்தவர் வட்டாரங்களில் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல்.

பல் அங்கத்தவர் வட்டாரத்தில் சகல வாக்குகளும் எண்ணப்பட்டதன் பின்னர் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர் இருவர் / மூவர் அந்தவட்டாரத்தில் சம்பந்தப்பட்ட

உள்ளூராட்சி நிறுவனத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர்களா-கத் தெரிவுசெய்யப்படுவர்.

## III. விகிதாசார முறையில் தெரிவாகும் உறுப்பினர்கள்

- சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்திற்கென அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடியாகும் வாக்குகளை அந்த உள்ளூராட்சி நிறுவனத்திற்காகத் தெரிவுசெய்யப்படும் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையால் பிரித்து “தகைமையளிக்கும் எண்” தீர்மானிக்கப்படும்.

- சம்பந்தப்பட்ட அரசியல் கட்சி பெற்றவாக்குகளின் எண்ணிக்கையைத் தகைமையளிக்கும் எண்ணால் வகுத்து குறித்த அரசியல் கட்சிக்குக் கிடைக்கவேண்டிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். மேலும், ஏதேனும் அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு மொத்தமாக சபையிலிருந்து கிடைக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு சமனான அல்லது அதற்கும் அதிகமான உறுப்பினர்கள் வட்டாரத்திலிருந்து கிடைத்துள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறான எல்லா உறுப்பினர்களும் ஆண்களாகவிருக்கும்போது கட்சி அல்லது சுயேச்சைக் குழு பெற்றுள்ள மொத்த வாக்குகளும் உள்ளூராட்சி நிறுவனத்தின் செல்லுபடியாகும் மொத்த வாக்குகளிலிருந்து கழிக்கப்படும்.

- அவ்வாறு கிடைத்த மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையிலிருந்து சம்பந்தப்பட்ட அரசியல் கட்சி அதுவரை வட்டாரத்திலிருந்து தெரிவுசெய்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கழித்த பின்னர் குறித்த அரசியல் கட்சி சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்திற்காகத் தெரிவு செய்யவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

## IV. கட்டாய பெண் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல்

தேர்தலொன்றில் பெற்றமொத்த செல்லுபடியாகும் வாக்குகளின் எண்ணிக்கையில் 20□ ஐ விடவும் குறைவாக வாக்குகளைப் பெற்று மூன்றுக்குக் குறைந்த உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை மொத்த செல்லுபடியாகும் வாக்குகளின் எண்ணிக்கையிலிருந்து கழிக்கப்படும். மேலும், ஏதேனும் அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு மொத்தமாக சபையிலிருந்து கிடைக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு சமனான அல்லது அதற்கும் அதிகமான உறுப்பினர்கள் -

வட்டாரத்திலிருந்து கிடைத்துள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறான எல்லா உறுப்பினர்களும் ஆண்களாகவிருக்கும்போது கட்சி அல்லது சுயேச்சைக்

குழு பெற்றுள்ள மொத்த வாக்குகளும் உள்ளூராட்சி நிறுவனத்தின் செல்லுபடியாகும் மொத்த வாக்குகளிலிருந்து கழிக்கப்படும்.

- ◈ அந்த எண்ணிக்கை உள்ளூராட்சி நிறுவனத்திற்குத் தெரிவு செய்யப்படவேண்டிய மொத்த உறுப்பினர் எண்ணிக்கையின் நான்கில் ஒரு பங்குக்குச் சமனான எண்ணால் பிரிக்கப்படும். அது பெண்களின் பிரதிநிதித்துவத்திற்கு உரிய “தகைமையளிக்கும் எண்” எனக் கருதப்படும்.

- ◈ எஞ்சிய (கழிக்கப்பட்ட கட்சிகள் அல்லது குழுக்கள் தவிர்ந்த) ஒவ்வோர் அரசியல் கட்சியும் சுயேச்சைக் குழுவும் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையை அந்த தகைமையளிக்கும் எண்ணால் பிரிப்பதன் மூலம் குறித்த அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு பிரதிநிதித்துவம் செய்ய வேண்டிய பெண்உறு - ப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

அதுவரையில் வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக கட்சிகளால் தெரிவு செய்யவேண்டிய மிகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை விகிதாசார முறையின் கீழ் சம்பந்தப்பட்ட கட்சிக்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையிலிருந்து தீர்மானிக்கப்படும்.

# 5.
# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல்

## 1. வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கான தகைமைகள்

உள்ளூராட்சித் தேர்தலில் ஒரு வேட்பாளராகக் களமிறங்க வேண்டுமானால், அதற்காக ஓர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு சமர்ப்பிக்கும் வேட்பு மனுவில் உங்கள் பெயர் இடம்பெற வேண்டும். அவ்வாறு பெயர்

உள்ளடக்கப்பட வேண்டுமாயின் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் தகைமைபெற வேண்டும். மேலும் 09ஆம் பிரிவின்கீழான தகைமையீனங்களுக்கு உட்படாதவராக இருக்க வேண்டும்.

### ◈ தகைமைகள்

- தேர்தல் நடாத்தப்படவுள்ள உள்ளூர் அதிகார சபையின் ஆளுகைப் பிரதேசத்திற்குரிய வாக்காளர் இடாப்பில் தனது பெயரைப் பதிந்துகொள்ளத் தகைமை பெற்றிருத்தல். (வாக்களார் இடாப்பில் பெயர் இடம்பெற்றிருக்க வேண்டுமென்பது அவசியமற்றது.)
- அந்த இடாப்பு தயாரிக்கப்படத் தொடங்கிய அல்லது புதுப்பிக்கத் தொடங்கிய ஆண்டின் ஜுன் மாதம் முதலாம் நாளன்று அந்த உள்;ராட்சி ஆளுகைப் பிரதேசத்தில் சாதாரணமாக வசித்திருத்தல்.

### ◈ தகைமையீனங்கள்

- இலங்கைப் பிரஜையல்லாதவரான ஒருவர்
- பதினெட்டு வயதிற்குக் குறைந்தவரான ஒருவர்
- நீதித்துறை அலுவலர்
- ஆயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினர்
- பொலிசு அலுவலர்
- அரசாங்கத் திணைக்களமொன்றில் கீழ்வரும் பதவிகளை வகி க்கும் அரசாங்கப்பணியாளர்

◈ 2007 ஜனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் உருவாக்கப்பட்டதும் 2007 ஜுன் 01ஆம் திகதியன்று சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 2,27,280 ரூபாவுக்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின் கீழ் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததுமான ஏதேனும் பதவி அல்லது

- ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின் அலுவலர் ஒருவர் அல்லது

◈ 2007 ஜனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் உருவாக்கப்பட்டதும் 2007 ஜுன் 01ஆம் திகதியன்று சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 2,27,280 ரூபாவுக்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின் கீழ் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததுமான ஏதேனும் பதவி அல்லது

◈ 2007 ஜனவரி 01ஆம் திகதிக்குப் பினனர் உருவாக்கப்பட்டதும், அப்பதவி உருவாக்கப்பட்ட திகதியன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் மேற்படி விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்கச் சம்பளத்திற்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத் திட்டத்தின்கீழ் முதலில் கூறப்பட்ட தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததுமான ஏதேனும் பதவியை அல்லது

- ஏதேனும் அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர் ஒருவர் அல்லது

◈ 2009 ஜனவரி 01ஆம் திகதிக்கு முன்னர் உருவாக்கப்பட்டதும் 2009 ஜனவரி 01ஆம் திகதியன்று அதற்கான சம்பள அளவுத் திட்டத்தின் தொடக்கச் சம்பளம் ஆண்டொன்றுக்கு 2,46,300 ரூபாவுக்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் அத்தகைய தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறை - றயாததுமான ஏதேனும் பதவியைப் அல்லது

◈ 2009 ஜனவரி 01ஆம் திகதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்டதும் அப்பதவி உருவாக்கப்பட்ட திகதியன்று அதற்கான சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளம் மேற்படி விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஒரு பதவிக்கு அத்திகதியன்று ஏற்புடையதாகும் சம்பள அளவுத்திட்டத்தின் தொடக்கச் சம்பளத்திற்கு அல்லது அடுத்துப் பின்னரான ஏதேனும் சம்பள அளவுத்திட்ட மீளாய்வின்கீழ் முதலில் கூறப்பட்ட தொடக்கச் சம்பளத்தை நேரொத்ததாக ஆண்டொன்றுக்கு இருக்கும் அத்தகைய வேறு தொகைக்குக் குறையாததுமான ஏதேனும் பதவியை வகிக்கும் அலுவலர்.

- பிற உள்ளூராட்சி நிறுவனத்தின் பணியாளர் அல்லது

- சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்தில் பணியாளராக இருக்கின்ற அல்லது குறித்த நிறுவனத்தில் பணியாளராக இருந்து உறுப்பி னர்கள் தெரிவு செய்யப்படும் திகதிக்கு ஓராண்டு காலத்தினுள் சேவையை முடிவுறுத்திய நபர்

- நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ள ஒருவர்

- சித்தசுவாதீனமற்ற ஒருவர்

- வங்குரோத்து நிலையை அடைந்த ஒருவர்

- 12 மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு காலத்திற்கான மறியல் தண்டனை அல்லது மரண தண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டு அதற்குப் பதிலாக மறியல் தண்டனை அனுபவிக்கும் ஒருவர்

- ஏதேனும் நீதிமன்றத்தில் தேர்தல் தவறு ஒன்றுக்காக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட அல்லது பாராளுமன்ற உறுப்பினராவதற்குத் தகைமையற்றவர் எனத் தீர்மானிக்கப்பட்ட நபர்

- தேர்தலில் போட்டியிட அல்லது கூட்டங்களில் கலந்துகொள்ள அல்லது வாக்களிக்கத் தகைமைபெறாத நபர்

- பகிரங்க நிறுவனங்கள் (ஊழல் ஒழிப்பு) கட்டளைச் சட்டத்தின் 5ஆம் பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட காரண த்தினால் அல்லது விசாரணை ஆணைக்குழு ஒன்றின் தீர்ப்புக் காரணமாக உறுப்பினராவதற்குத் தகைமையற்ற நபர்

- குற்றத் தவறு ஒன்றுக்கு மூன்று மாதங்களுக்கும் அதிகமானதொரு காலம் மறியல் தண்டனை அனுபவித்தல் அல்லது அத்தண்டனை முடிந்து 05 ஆண்டுகள் கழியாதிருத்தல்.

- ஒன்றுக்கும் மேற்பட்ட வேட்புமனுக்களில் பெயரை உள்ளடக்குதல்

- மாநகர சபைள் சட்டத்தின 277 பிரிவு, நகர சபைகள் சட்டத்தின் 184 பிரிவு, அல்லது பிரதேச சபைகள் சட்டத்தனி 179 பிரிவின் கீழ் விலக்கப்பட்ட ஓர் உறுப்பினர் அவ்வாறு விலக்கப்பட்டு 05 ஆண்டுகள் கழியாதிருத்தல்.

- உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் நடாத்தப்படுவதற்குக் குறைந் தபட்சம் ஓராண்டு காலத்திற்கு முன்னர் குறித்த உள்ளூராட்சி ஆளுகைப் பிரதேசத்தில் சேவை முடிவுறுத்தப்படாத

குறித்த உள்ளூராட்சி நிறுவனத்திற்காக வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள வெளிக்கள அலுவலர்கள் (உட்பந்தியின் கருமங்களுக்காக "வெளிக்கள பணியில் ஈடுபடும் அரச அலுவலர் ஒருவர்" என்பதற்கு அபிவிருத்தி, நலன்புரி, பொருளாதார, சமூக சுகாதார அல்லது அவரின் தொழில் விடயப் பரப்பினுள் அடங்கும் பிற செயற்பாடுகளில் ஈடுபடும் நபர் அடங்குவார்.)

தாம் வகிக்கும் பதவி காரணமாக வேட்புமனுத் தாக்கல் செய்ய தகைமையற்றவர்களுக்கு குறிதத பதவியை இராஜினாமா செய்த பின்னர் வேட்புமனுத் தாக்கல் செய்ய முடியும்.

## II. வேட்புமனுத் தாக்கல்

தேர்தல் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவுக்கு உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய முடியும்.

அதற்கான நியமனக் கால எல்லையும் இடமும் அந்தந்தத் தேர்தலுக்கு ஏற்புடையதாக தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்படும். புதிய உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் சட்டத்தின் படி போட்டியிடும் ஒவ்வோர் அரசியல் கட்சியும் சுயேச்சைக் குழுவும் இரண்டு வேட்புமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

1. வட்டாரத்திற்கான வேட்புமனு (வேட்பாளர்கள்)

2. விகிதாசார வேட்புமனு (மேலதிக வேட்புமனு)

முதலாவது வேட்புமனுவில் சம்பந்தப்பட்ட வட்டாரத்தில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களால் நிறுத்தப்படும் வேட்பாளர்களின் பெயர்களை உள்ளடக்க வேண்டும். தனி அங்கத்தவர் வட்டாரமாயின், உரிய வட்டாரத்தின் பெயர் மற்றும் இலக்கத்தின் முன்னால் பெயர் ஒன்றையும் பல் அங்கத்தவர் வட்டாரமாயின் ஏற்பான விதத்தில் ஒரு அல்லது இரண்டு பெயர்களைக் குறிப்பிட வேண்டும். இப்பட்டியலிலுள்ள மொத்த எண்ணிக்கையில் 10□ பெண்களாக இருத்தல் வேண்டும்.

இரண்டாவது பட்டியலில் தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையின் 40 சதவீதத்திற்கு 03 ஐக் கூட்டுவதால் பெறப்படும் எண்ணிக்கைக்குச் சமனான உறுப்பினர்களின் பெயர்களை உள்ளடக்க வேண்டும். இதில் 50□ பெண்களாக இருக்க வேண்டும்.

புதிய தேர்தல் சட்டத்தில் இளைஞர் வேட்பாளர்களைப் பட்டியலில் சேர்த்தல் கட்டாயமாக்கப்படவில்லை. எவ்வாறாயினும் தேவையேற்படின் 30□ இளைஞர்களை உள்ளடக்க முடியுமென சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு வேட்பு மனுவும் உரிய அரசியல் கட்சிச் செயலாளரின் அல்லது சுயேச்சைக்குழுத் தலைவரினால் ஒப்பமிடப்பட்டு சமாதான நீதிவான் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

அரசியல் கட்சியின் அதிகாரம்பெற்ற முகவர் அல்லது சுயேச்சைக் குழுத் தலைவரினால் வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

### III. வைப்புப் பணம்

தெரிவத்தாட்சி அலுவலரால் வாக்கெடுப்பிற்கான வேட்புமனுத் திகதி பற்றி அறிவித்தல் கொடுக்கப்பட்ட நாளில் தொடங்கி வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளுக்கு முந்திய நாள் மதியம் 12.00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய எதிர்பார்க்கும் அரசியல்கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் வைப்புப் பணத்தை வைப்பிலிட வேண்டும்.

- ♦ அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் வேட்புமனுவில் இடம்பெறும் ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் தலா 1500 ரூபாவினையும்,
- ♦ சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுவில் இடம்பெறும் ஒவ்வொரு வேட்பாளர் சார்பாக தலா 5000 ரூபாவினையும் வைப்பிலிட வேண்டும்.

ஒவ்வோர் உள்ளூராட்சி நிறுவனத்திற்குமான உறுப்பினர்களின் எண்ணிக்கை 2017 நவம்பர் 02ஆம் திகதி வெளியிடப்பட்ட 2043/56 இலக்க வர்த்தமானப்

பத்திரிகையில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் உள்ளூராட்சி நிறுவனத்தின் வேட்பாளர் பட்டியலிலும் (முதலாம், இரண்டாம் வேட்புமனுக்களில்) உள்ளடக்கப்பட வேண்டிய பெண் உறுப்பனர்களின் எண்ணிக்கை 2017 நவம்பர் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட 2045/55 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 06
# தேர்தல் பிரசாரம்

சகல வேட்பாளர்களும் வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் தமது வெற்றிக்காக பிரசாரத்தில் ஈடுபடுவார்கள். அதேபோல் சகல வேட்பாளர்கள் தமது கட்சியின் சின்னத்தையும் இலக்கத்தையும் தன்னுடைய உருவப் படத்தையும் மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்த நடவடிக்கையெடுப்பதுண்டு. ஆகவே, மேற்கொள்ளும் பிரசார நடவடிக்கைகள் பற்றியும் அவற்றின் சட்ட நிலைமைகள் உள்;ரதிகார சபைகள் தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## I. சுவரொட்டிகளும் துண்டுப்பிரசுரங்களும் (பிரிவு 81அ)

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து வாக்கெடுப்பு நடைபெறும் நாளுக்கு அடுத்துவரும் நாள் வரை கீழ்க்காணும் இடங்களில் சுவரொட்டிகளையும் துண்டுப்பிரசுரங்களையும் காட்சிப்படுத்த முடியும்.

1. வேட்பாளர் பயணம் செய்யும் வாகனம்
2. தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடாத்தப்படும் இடங்கள்
3. அறிவிக்கப்பட்ட பிரசார அலுவலக வளாகத்தினுள்

இவை தவிர, பொதுமக்கள் நடமாடக்கூடிய எந்தவோர் இடத்தில் அல்லது வாகனத்தில் அல்லது பொதுத் தெருவின்மீது வேட்பாளரின் புகைப்படத்தை, சின்னத்தை அல்லது சித்திரத்தை அல்லது வேட்பாளர் தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்பினை ஆதரிக்கும் அறிவித்தலைக் காட்சிப்படுத்தக்கூடாது.

மேலும், வேட்பாளர் பயணம் செய்வதற்காகப் பயன்படுத்தும் வாகனம் தவிர்ந்த வேறு எந்தவொரு பொது அல்லது

தனிப்பட்ட ஓரிடத்தில் வேட்பாளர் தெரிவுசெய்யப்படுவதை ஊக்கப்படுத்தும் கொடியை அல்லது பதாகையைக் காட்சிப்படுத்தல் தடையாகும்.

## II. செய்தித் தாள்களில் பொய்யான அறிக்கைகளை வெளியிடல் (81 ஈ பிரிவு)

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் தேர்தல் முடிவில் மாற்றத்தை உண்டுபண்ணக்கூடியவிதமாக அவர் உரைத்தவை அல்லது செய்தவை சம்பந்தமாகப் பொய்யான செய்தி ஒன்றை ஏதேனும் செய்தித் தாள், பருவகால வெளியீடு, வானொலி அல்லது தொலைக்காட்சி (ஊடகமொன்றில் ஒலி / ஒளி பரப்புதல்) வெளியிடுதல் தவறாகும்.

## III. ஊர்வலங்கள் (பிரிவு 81 அ (2ஆ)

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து வாக்கெடுப்பு நடைபெறும் நாளுக்கு அடுத்த நாள் வரையான காலத்தினுள் ஊர்வலமொன்று அல்லது கலாசார மற்றும் சமூக நோக்கங்களுக்கான ஏதேனும் ஊர்வலம் தவிர்ந்த பிரசாரத்தின் ஓர் அங்கமாக ஊர்வலம் எதனையும் நடத்தக்கூடாது. அவ்வாறான ஊர்வலமொன்றை நடாத்திச் செல்லல், ஏற்படுத்தல் அல்லது அதில் பங்குபற்றுதல் தவறாகும். (12 பேர் அல்லது அதிலும் கூடிய தொகை எண்ணிக்கையிலானோர் கலந்துகொள்ளுதல் ஊர்வலமாகும்)

## IV. சமய பணித்துறை அமைப்புகளில் தேர்தல் பிரசாரம் செய்தல் (பிரிவு 81 (5) இ)

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக்குழுவுக்கு ஆதரவு காட்டும் வகையில் சமய பணித்துறை அமைப்பொன்றில் பொதுக்கூட்டமொன்றை நடாத்துதல் அல்லது நடாத்த உடந்தையாக இருத்தல் தவறாகும். அவ்வாறான ஓர் இடத்தில் துண்டுப் பிரசுரம், ஒட்டு விளம்பரம், சித்திரம், வேட்பாளரின் புகைப்படம், சின்னம் அல்லது கொடி ஒன்றை விநியோகித்தல் தவறாகும். மேலும் வாக்களிக்க அல்லது வாக்களிக்காதிருக்கத் தூண்டும் வகையில் சமயப் பணி அல்லது ஆன்மீகப் பணி செய்தல் தவறாகும்.

## V. தேர்தல் பிரசார அலுவலகங்கள்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் பற்றிய கட்டளைச் சட்டத்திலோ அல்லது அதில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களிலோ தேர்தல் பிரசார அலுவலகங்கள் தொடர்பான ஏற்பாடுகள் இல்லையெனினும், தேர்தல் ஆணைக்குழு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

அதன்படி, ஒவ்வோர் அரசியல் கட்சிக்கும் சுயேச்சைக் குழுவுக்குமென

சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி ஆளுகைப் பிரதேசத்தில் ஒரு பிரசார அலுவலகத்தை வைத்திருப்பதற்கும், தனி அங்கத்தவர் வட்டாரமாயின் தலா ஒரு கிளை அலுவலகத்தை வைத்திருப்பதற்கும் பல் அங்கத்தவர் வட்டாரமாயின் உறுப்பினர்களின் எண்ணிக்கைபடி இரண்டு அல்லது மூன்று கிளை அலுவலகங்களை வைத்திருப்பதற்கும் அனுமதி உண்டு. மேற்படி அலுவலகங்களை வைத்திருப்பதற்கு உரிய மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் அனுமதி பெறவேண்டும்.

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 81அ(2அ)(அ) பிரிவில், வாக்கெடுப்பு நடைபெறும் நாளில் வேட்பாளர் சாதாரணமாக வசிக்கும் இடம் தவிர்ந்த வேறு எந்தவோர் இடத்திலும் வேட்பாளரைத் தெரிவு செய்யும் நடவடிக்கைக்காகத் தற்காலிக அல்லது நிரந்தரக் கட்டடமொன்றைப் பயன்படுத்தல் தவறாகும்.

## VI. பொதுக்கூட்டங்கள்

உள்;ர் அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தில் பொதுக்கூட்டங்கள் தொடர்பான ஏற்பாடுகள் காணப்படாதபோதும், தேர்தல் ஆணைக்குழு அதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது. பொதுக்கூட்டம் நடாத்தப்படும் இடத்தில் கூட்டம் ஆரம்பமாவதற்கு 18 மணித்தியாலங்களுக்குள் சோடிப்புகள் செய்யப்பட வேண்டிதோடு கூட்டம் முடிந்து 12 மணித்தியாலங்களுக்குள் சோடிப்புக்கள் அகற்றப்பட வேண்டும். மேலும், கூட்டம் நடைபெறும் இடத்திலிருந்து 400 மீற்றர் சுற்று வட்டாரம் வரையான பிரதேசத்தில் மட்டுமே சோடிப்புகளைச் செய்ய வேண்டும்.

இவ்வாறான பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கும் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட பொலிஸ்நிலையத்தில் அனுமதி பெறவேண்டும்.

## VII. வீட்டுக்கு வீடு சென்று பிரசாரம் செய்தல்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தில் வீட்டுக்கு வீடு சென்று தேர்தல் பிரசாரம் செய்தல் தொடர்பாகத் திட்டவட்டமாக எதுவும் தெரிவிக்கப்படாதபோதும் தேர்தல் ஆணைக்குழு அதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இவ்வாறு பிரசாரம் செய்வதில் ஈடுபடக்கூடிய ஆட்களின் அதிகூடிய எண்ணிக்கை 11 ஆகும். இவ்வாறு பிரசாரம் செய்யும்போது இசைக் குழுக்கள் அல்லது இசைக் கருவிகளைப் பயன்படுத்த முடியாது.

## VIII. தேர்தல் பிரசார நடவடிக்கைகளைக் கண்காணித்தல்

தேர்தலொன்றில் பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக விழிப்புடன் இருத்தல். விசேடமாக சட்டப்படியான பிரசார நடவடிக்கைகளை இடையூறின்றி மேற்கொள்ளத் தேவையான பாதுகாப்பினை வழங்குதல் மற்றும் சட்டவிரோதமான முறையில் பிரசாரம் மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிராக வழங்குத் தாக்கல் செய்தல், பிரசாரப் பொருட்களை அகற்றுதல் தொடர்பான அதிகாரம்

பொலிசாருக்கு வழங்கப்பட்டுள்ளது. பொலிசாருக்கு அதற்கானதொரு முறைப்பாடு கிடைக்க வேண்டுமென்பது அவசியமற்றது. பொலிஸ் அவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகள் பற்றி அறிந்திருந்தால் அதைத் தடுப்பதற்கும் அகற்றுவதற்குமான பொறுப்பு பொலிசாருக்கு உண்டு.

## IX. ஊடக அளவுகோல்கள்

தேர்தல் காலத்தில் அதாவது, தேர்தல் ஆணைக்குழுவால் தேர்தல் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட நாள் தொடக்கம் வாக்கெடுப்பு நடைபெறும் நாள் வரையான காலத்தினுள் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் நடுநிலையாகச் செயற்பட வேண்டிய அளவுகோல்களை நிர்ணயிக்கும் அதிகாரம் அரசியலமைப்பின் 104 (அ) (5) உறுப்புரையினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தேர்தல் ஆணைக்குழு 2017.12.04ஆம் திகதி 1248/01ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் ஊடக அளவுகேல்களை வெளியிட்டுள்ளது.

## X. தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் பொதுச் சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதைத் தடுத்தல்.

தேர்தல் காலத்தின்போது அரசுக்கு அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனம் –

i. தேர்தல் ஒன்றில் போட்டியிடும் ஒரு வேட்பாளர் அல்லது ஏதேனும் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக்குழு தெரிவுசெய்யப்படுவதற்கு ஆதரவு காட்டும் அல்லது தடுக்கும் வகையில் பயன்படுத்தப்படல்

ii. தேர்தல் ஒன்றில் போட்டியிடும் ஒரு வேட்பாளர் அல்லது ஏதேனும் அரசியல்கட்சி அல்லது சுயேச்சைக் குழுவினால் பயன்படுத் தப்படுவதைத் தடைசெய்யும் அதிகாரம் அரசியலமைப்பின் 104 (ஆ) (4) உறுப்புரையினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்க - ப்பட்டுள்ளது.

இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் ஆணைக்குழுவால் 2017 டிசெம்பர் 04ஆம் திகதிய மற்றும் 2048/2 இலக்க அதிவிசேட வர்தமானப் பத்திரிகை மூலம் “தேர்தல் காலப்பகுதிக்குள் அரசுக்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை அரசியல்

கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்களை ஊக்கப்படுத்துகின்ற இன்றேல் தடுக்கின்ற நோக்கத்திற்காக அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்தும் பணிக்கு தடங்கல் ஏற்படுத்தத்தக்கதாக பயன்படுத்தப்படுவதை தடைசெய்வதற்கான பணிப்புக்கள்" விடுக்கப்பட்டுள்ளது.

இப்பணிப்புக்களுக்கு அமைவாக செயற்படத் தவறும் ஒருவர் ஒரு இலட்சம் ரூபா குற்றப்பணத்தைச் செலுத்துவதற்கும் மூன்று ஆண்டு கால மறியல் தண்டனைக்குமுரிய குற்றவாளியாதல் வேண்டும்.

## XI. மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் உரிமைகளைக் கொண்ட அலுவலர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுதல்.

தாபன விதிகள் கோவையின் xxxii அத்தியாயத்தின்படி பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வாக்களிக்கும் உரிமை தவிர்ந்த பொதுக்கூட்டங்களில் பங்குபற்றுதல் மற்றும் ஏதேனும் வேட்பாளர் அல்லது கட்சியின் பிரசார நடவடிக்கையில் செயற்பாட்டுப் பங்களிப்பை வழங்குதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

சமாதான நீதவான்கள், ஆயுதந் தாங்கிய படையிலுள்ள அலுவலர்கள் மற்றும் தேர்தல் திணைக்கள அலுவலர்களும் இந்த மட்டுப்படுத்தப்பட்ட உரிமைகளைக் கொண்டவர்களின் பட்டியலில் அடங்குவர். இவ்வாறானவர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் தொடர்புபடுதல் தவறாகும். இவ்வாறான உத்தியோகத்தர்கள் கடமை நேரத்தில் அல்லது கடமைக்கு இடையூறாக அமையும் விதமாக அல்லது பதவி அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுதல் தவறாகும்.

# 07
# வாக்கெடுப்புத் திகதியும் வாக்களிப்பும்

## I. வாக்காளராக இருப்பதற்கான தகைமைகள்

இலங்கையிலுள்ள சகல பிரஜைகளுக்கும் வாக்குரிமை உண்டு. அது ஓர் அடிப்படை உரிமை என்பதை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இருப்பினும் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பதற்காக வாக்காளர்கள் இரண்டு தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும். அவையாவன,

- 18 வயதைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- உரிய வருடத்தில் வாக்களிப்பு நிலையத்திற்குரிய வாக்காளர் இடாப்பில் தமது பெயர் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

வாக்காளரின் பெயர் வாக்காளர் இடாப்பில் இடம் பெறாதபட்சத்தில் அவருக்கு வாக்களிக்க முடியாது.

## II. வாக்காளர்களை இனங்காணல்

வாக்காளரை இனங்காண்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவால் பின்வரும் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ஆட்பதிவுத் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
- செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்
- ஓய்வூதியம் பெறுவோர் அடையாள அட்டை
- முதியோர் அடையாள அட்டை
- ஆட்பதிவுத் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட மதகுருமார் அடையாள அட்டை
- தேர்தல் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை

இவ்வடையாள அட்டைகளில் ஒன்றைப் பயன்படுத்தி வாக்காளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். வகிக்கும் பதவிக்குரிய அடையாள அட்டை வாக்களிக்க செல்லுபடியாகாது.

## III. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை

வாக்கெடுப்பு நடாத்தப்படவுள்ள தெரிவத்தாட்சி அலுவலரால் வாக்காளர் இடாப்பில் இடம்பெறும் வாக்காளர் ஒவ்வொருவருக்கும் வாக்கெடுப்புத் திகதி, இடம், நேரம் மற்றும் சம்பந்தப்பட்ட வாக்காளரின் தொடர் இலக்கம் ஆகிய விபரங்கள் அடங்கிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

அந்த அட்டை வாக்காளர் ஒவ்வொருவருக்கும் வாக்கெடுப்பு நடாத்தப்படுவதற்கு 05 நாட்களுக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். குறித்த அட்டையைத் தபால்மூலம் ஒப்படைக்க முடியாதவிடத்து, அது உரிய தபால் அலுவலகத்தில் வைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட தபால் அதிபரால் வாக்காளரிடம் வழங்கப்படும்.

இவ்வாறன உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விற்பனை செய்தல், கொள்வனவு செய்தல் அல்லது அதிகாரமின்றி விநியோகித்தல் அல்லது தமக்குரியதல்லாத அட்டையைத் உடைமையில் வைத்திருத்தல் தவறாகும்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை வாக்களிக்கத் தேவையான கட்டாய ஆவணமாக இல்லாதபோதும், அதனை வாக்களிப்பு நிலையத்திற்கு எடுத்துச்செல்வது வசதியாக அமையும்.

## IV. வாக்கெடுப்பு நாளில் தடைசெய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள்

வாக்கெடுப்பு நிலையத்தின் வளவினுள் அல்லது அதன் வாசலிலிருந்து அரைக் கிலோமீற்றர் தூர எல்லைக்குள்

1. வாக்களிக்குமாறு இரந்து கேட்டல்
2. கட்சியொன்றுக்கு வாக்களிக்க வேண்டாமென வாக்காளர்களை வசப்படுத்தல்
3. தேர்தல் பிரசார பிரசுரங்கள் அல்லது வேறுவிதமான பிரசார நடவடி க்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

வாக்கெடுப்பு நிலையத்தினுள் அல்லது அதன் வாசலில் அல்லது அதற்கு அயலில் ஏதேனும் பொது இடத்தில் அல்லது தனியார் இடத்தில் ஏதேனும் ஒலிபரப்பியை அல்லது ஒலிபெருக்கியை அல்லது மனித குரலை

ஒலிபரப்புவதற்கான அல்லது மீளாக்குவதற்கான வேறு உபகரணத்தை வாக்கெடுப்பு நிலையத்தில் சமூகமாய் இருக்கின்ற அல்லது வாக்கெடுப்பு நிலையத்தில் கடமை புரிகின்றவர்களுக்குத் தொந்தரவாக அமையும் வண்ணம் பயன்படுத்தக்கூடாது.

மேலும், வாக்கெடுப்பு நிலையத்தின் வாசலில் அல்லது அதற்கு அயலில் ஒழுங்கீனமான முறையில் செயற்படுதல் தவறாகும்.

## V. வாக்களிப்பு நிலையத்தினுள் செல்ல அனுமதி உடையவர்கள்

- ◈ வாக்காளர்கள்
- ◈ வாக்கெடுப்பு நிலைய அலுவலர்கள்
- ◈ அதிகாரம் பெற்ற வாக்களிப்பு நிலைய முகவர்கள்
- ◈ தேர்தல் அலுவலர்கள் (உதவி தெரிவத்தாட்சி அலுவலர்)
- ◈ வேட்பாளர்கள் (ஒரு தடவையில் ஒருவர் மட்டும்)
- ◈ போட்டியிடும் அரசியல் கட்சியின் செயலாளர்
- ◈ அதிகாரம் பெற்ற தேர்தல் அவதானிப்பாளர்கள்
- ◈ தேர்தல் கடமையிலுள்ள பொலிசார்

## VI. வாக்கெடுப்பு நிலையங்களில் வெளிக்காட்டி வைக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள்

தலைமைதாங்கும் அலுவலர் வாக்களிப்பு நிலையம் ஒவ்வொன்றிலும் பின்வரும் அறிவித்தல்களை வைக்க வேண்டும்.

- ◈ வாக்காளர்களுக்கு வாக்களிக்க வழிகாட்டும் அறிவித்தல்.
- ◈ ஒவ்வோர் அரசியல் கட்சி மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட சின்னங்கள் அடங்கிய அறிவித்தல்.

## VII. வாக்கெடுப்பை நடாத்துதல்

சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர் (SPO) அவரது நிலையத்தின் ஒழுங்கைப் பேண வேண்டும். ஒரு தடவையில் உட்செல்ல அனுமதிக்கப்பட வேண்டிய வாக்காளர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அதிகாரம் அவருக்கு உண்டு. வாக்கெடுப்பு நிலையத்தினுள் எவரேனும் ஒருவர் தலைமைதாங்கும் அலுவலரின் சட்டபூர்வமான கட்டளைக்குக் கீழ்ப்படியாது ஒழுக்கக்கேடாக நடந்தால் அவரை உடனடியாக வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றும் அதிகாரம் தலைமைதாங்கும் அலுவலருக்கு உண்டு.

## VIII. வாக்கெடுப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் தலைமைதாங்கும் அலுவலரின் பணிகள்

- வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தந்துள்ளவர்களிடம் வாக்குச்சீட்டுக்களையும் அலுவலக முறையான இலச்சினை யையும்அலுவலக முறையான குறியீட்டையும் வாக்காளர் இடாப்பின் பாகங்களின் பிரதிகளையும் காண்பித்தல் வேண்டும்.
- வாக்குப்பெட்டிகள் வெறுமையாக உள்ளதென்பதைக் காண்பிதத‌ல் வேண்டும்.
- வாக்குப் பெட்டிமீது இலச்சினை இடுதல் வேண்டும்.

## IX. வாக்காளருக்கு வாக்கச் சீட்டுக்களை வழங்குதல்

- வாக்காளர் இடாப்பின் பிரதியில் கூறப்பட்டவாறு வாக்காளரின் இலக்கமும் பெயரும் விவரணமும் கூப்பிடப்படுதல் வேண்டும்.
- வாக்காளரின் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும்.
- வாக்காளரின் இடது கையின் சிறுவிரலில் தோதான குறியீட்டை இடவேண்டும்.
- வாக்காளரின் இலக்கமானது அடியிதழ்த்தாளிற் குறிக்கப்பட்டு அதிலிருந்து வாக்குச்சீட்டு கிழிக்கப்படல் வேண்டும்.
- வாக்குச்சீட்டில் அலுவலக முறையான குறியீட்டையிடுதல் வேண்டும். (துளையிடுதல் அல்லது பதித்தல்)
- வாக்காளருக்கு வாக்குச்சீட்டு வழங்கப்பட்டதைக் காண்பிப்ப தற்காக வாக்காளரின் பெயருக்கு எதிரே இடாப்பில் குறியீடு ஒன்று இடப்படுதல் வேண்டும். (வாக்குச் சீட்டின் இலக்கத்தைக் குறிப்பிடக் கூடாது)
- வாக்காளருக்கு வாக்குச்சீட்டை வழங்க வேண்டும்.

## X. வாக்களிக்கும் முறை

- தலைமைதாங்கும் அலுவலரினால் அமைக்கப்பட்டுள்ள மறைவுக்கூடுகள் ஒன்றினுள் சென்று வாக்களிக்க வேண்டும்.
- வாக்காளர் புள்ளடி இட்ட வாக்குச்சீட்டை அவரே பெட்டியினுள் இடுதல் வேண்டும்.
- தலைமைதாங்கும் அலுவலருக்கு அல்லது அவரின் முகவருக்கு எவரேனும் வாக்காளர் ஒருவருக்கு வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் பார்க்கத்தக்கதாக வாக்களிக்க வேண்டிய விதம் பற்றி விளக்கமளிக்க முடியும்.. இருப்பினும்,
- கட்சியொன்றுக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்கும்படியாக ஆலோசனை கூறுதல் கூடாது.
- குருட்டுத் தன்மை அல்லது வேறு உடற்குறைபாடு காரணமாக வாக்களிக்க இயலாதவர்களுக்கு தலைமைதாங்கும் அலுவலரின் அதிகாரத்துடன் வாக்காளரின் விண்ணப்பத்தின் மீது வாக்குச்சீட்டில் புள்ளடி இட்டு வாக்குப் பெட்டியினுள் இடமுடியும்.
- வாக்காளர் தற்செயலாக வாக்குச்சீட்டொன்றைப் பழுதாக்கினால் தலைமைதாங்கும் அலுவலர் அத்தகைய தற்செயல் பற்றித் திருப்திப்படின் அவருக்கு இன்னொரு வாக்குச்சீட்டு வழங்கப்படும்.
- வாக்காளர் ஒருவரின் வாக்கினை வேறு ஆள் அளித்துள்ள சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட வாக்காளருக்கு “கேட்டுப் பெறும் வாக்குச்சீட்டு” வழங்கப்படும். இந்த வாக்குச்சீட்டு வேறுபட்ட நிறத்தைக் கொண்டிருக்கும். வாக்குச்சீட்டைப் பெறுமுன்னர் வாக்காளர் வெளிப்படுத்துகையொன்றைச் செய்ய வேண்டும். மேலும், அவரின் பெயர் கேட்டுப் பெறும் வாக்குச்சீட்டு நிரலில் பதியப்படும்.

    - புதிய முறையில் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் விருப்பு வாக்குமுறை இல்லாததால் தாம் விரும்பும் வேட்பாளரைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னத்தின் எதிரே புள்ளடி இடல் வேண்டும்.

## XI. வாக்காளரை வெளிப்படுத்துகை ஒன்றைச் செய்யுமாறு பணித்தல்.

வாக்கெடுப்பு நிலையத்தின் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலரின் தற்றுணிபின்படி,

- ❖ குறித்த பெயர் மற்றும் விலாசத்திற்குரியவர் தான் என்பதையும்,
- ❖ தான் இத்தேர்தலில் வேறு ஒரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்கவில்லை என்பதையும்,
- ❖ உரிய தேர்தலில் வாக்களிக்கத் தகைமையற்றவர் அல்ல என்பதையும்,
- ❖ இத்தேர்தலுக்கு ஏற்பானதாக வேறு ஒரு தேர்தல் மாவட்டத்தில் வாக்களிக்கவில்லையென்பதையும்

வெளிப்படுத்துமாறு வாக்காளர் ஒருவரைப் பணிக்கலாம். அவ்வாறான வெளிப்படுத்துகை ஒன்றைச் செய்ய மறுக்கும் பட்சத்தில் தலைமைதாங்கும் அலுவலர் அவருக்கு வாக்குச் சீட்டை வழங்க மறுக்கலாம். மேற்படி வெளிப்படுத்துகையில் பொய்யான தகவலளிக்கும் ஒருவர் 06 மாத மறியல் தண்டனைக்கான குற்றவாளியாதல் வேண்டும்.

## XII. வாக்கெடுப்பை முடித்தல்

குறித்த நேரத்தின் பின்னர் (பிற்பகல் 4.00 மணி) வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டுகள் வழங்கப்படமாட்டாது. இருப்பினும், அந்த நேரத்தில் வாக்குச்சீட்டுகள் ஒப்படைக்கப்பட்டுள்ள வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.

# 08
# வாக்கெண்ணுதல்

## I. வாக்கெண்ணும் நிலையங்கள்

வாக்கெண்ணுதல் வாக்கெடுப்பு நிலையத்திலேயே நடைபெறுதல் புதிய உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் சட்டத்தில் காணப்படும் மற்றுமொரு சிறப்பம்சமாகும். அதன்படி, வாக்குப் பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதோ அல்லது தேர்தல் அலுவலர்களில் மாற்றமோ ஏற்படமாட்டாது. வாக்குகள் வாக்கெடுப்பு நிலையங்களிலேயே எண்ணப்படும்.

மேலும், வாக்கெடுப்பு நிலையத்திலிருக்கும் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர் வாக்கெண்ணும்போது வாக்கெண்ணும் அலுவலராகப் பணியாற்றுவதுடன், ஏனைய வாக்கெண்ணும் பணியாளர்கள் வாக்கெண்ணும் பணியாட்தொகுதியாக மாறிச் செயற்படுவர்.

வட்டாரமொன்றில் பல வாக்கெடுப்பு நிலையங்கள் இருக்கும்போது தேர்தல் ஆணைக்குழு அவ்வாறான வாக்கெடுப்பு நிலையங்களில் ஒன்றில் இருக்கின்ற சிரே‘ட தலைமைதாங்கும் அலுவலர் ஒருவர் குறித்த வட்டாரத்தின் பிரதான வாக்கெண்ணும் அலுவலராக நியமிக்கப்படுவார். பிரதான வாக்கெண்ணும் அலுவலர் இருக்கின்ற வாக்கெடுப்பு நிலையத்தில் முடிவுகள் அறிவிக்கப்படும்.

விடயத்திற்கு ஏற்றவாறு வட்டாரத்திலுள்ள வாக்கெடுப்பு நிலையங்களில் ஏதேனும் ஒன்று அல்லது அவ்வாறான எல்லா நிலையங்களும் வாக்கெண்ணப் பொருத்தமற்றதாக இருக்கும்பட்சத்தில் வேறு நிலையமொன்றில் வாக்கெண்ணும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு.

## II. வாக்கெண்ணும் முகவர்கள்

வாக்கெண்ணும் நிலையமொன்றுக்கு ஓர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக்குழு சார்பில் இரண்டு முகவர்களை நியமிக்க முடியும். வேட்பாளர் ஒருவர் வாக்கெண்ணும் நிலையத்தினுள் செல்லவேண்டுமாயின், அவர் வாக்கெண்ணும் முகவராக இருத்தல் வேண்டும்.

## III. வாக்கெண்ணுதல்

வாக்கெடுப்பு முடிந்த பின்னர் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலரால் வாக்கெண்ணத் தொடங்கும் நேரத்தை அலுவலர்களுக்கும் வாக்கெண்ணும் முகவர்களுக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும். உரிய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குகள் எண்ணப்பட்டதன் பின்னர் அதன் முடிவுகள் வட்டாரத்தின் பிரதான வாக்கெண்ணும் அலுவலர் இருக்கின்ற வாக்கெண்ணும் நிலையத்திற்கு அறிவிக்கப்படும்.

## IV. தபால் வாக்குகளை எண்ணுதல்

உள்ளூராட்சி ஆளுகைப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு வட்டாரத்திற்குமுரிய பிரதான வாக்கெண்ணும் நிலையத்திற்கு உரிய வட்டாரத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தபால் வாக்குச் சீட்டுக்கள் அனுப்பி வைக்கப்படும். அதன்படி, எண்ணப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் வாக்கெடுப்பு திகதியில் கிடைத்த வாக்குச் சீட்டுக்களுடன் சேர்க்கப்படும். தபால் வாக்குகளின் முடிவுகள் அறிவிக்கப்படமாட்டாது.

## V. முடிவுகளை அறிவித்தல்

### ▣ வாக்கெண்ணும் நிலையத்தில் முடிவுகளை அறிவித்தல்

உரிய வட்டாரத்தின் பிரதான வாக்கெண்ணும் அலுவலரால், தனது நிலையத்தின் வாக்குகள், தபால் வாக்குகள் மற்றும் வட்டாரத்திலுள்ள பிற வாக்கெண்ணும் நிலையங்களிலிருந்து கிடைத்த முடிவுகளையும் கூட்டி ஆகக்கூடிய வாக்குகளைப்பெற்ற அரசியல் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர் அந்த வட்டாரத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படும். குறித்த வட்டாரம் பல் அங்கத்தவர் வட்டாரமொன்றாயின், ஆகக்கூடிய வாக்குகளைப்பெற்ற அரசியல் கட்சியின் அல்லது சுயேச்சைக்குழுவின் வேட்பாளர்கள் இருவர் அல்லது மூவர் குறித்த வட்டாரத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களாக அறிவிக்கப்படுவர். அதேபோல், பிற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையும் அறிவிக்கப்படும். அதன் பின்னர் சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களும் உள்ளூராட்சி நிறுவனத்திற்குரிய தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒப்படைக்கப்படும்.

### ▣ தெரிவத்தாட்சி அலுவலர் முடிவுகளை அறிவித்தல்

தெரிவத்தாட்சி அலுவலர் சகல வட்டாரங்களினதும் தேர்தல் முடிவுகளைக் கவனத்தில் கொண்டு ஒவ்வொரு கட்சி அல்லது சுயேச்சைக் குழு விகிதாசார முறையில் நியமிக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் கட்டாயமாக நியமிக்கப்படவேண்டி பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் அறிவிப்பார். அந்த முடிவுகள் தேர்தல் ஆணைக்குழுக்கு அனுப்பி வைக்கப்பட்டு தேர்தல் ஆணைக்குழுவால் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும்.

## VI. நிராகரிக்கப்படும் வாக்குச்சீட்டுகள்

- அலுவலக முறையான குறியீடு இடப்படாத வாக்குச் சீட்டுகள்.
- ஒன்றுக்கு மேற்பட்ட அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு புள்ளடி இடப்பட்டுள்ள வாக்குச்சீட்டுகள்.
- புள்ளடி இடப்படாத அல்லது புள்ளடி இடப்பட்டுள்ள போதும் எக்கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது என்பதை கண்டுபிடிக்க முடியாத வாக்குச்சீட்டுகள்.

# 09.

# உள்ளூராட்சி நிறுவனங்களை அமைத்தல்

## I. உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் உள்ளூராட்சி நிறுவனங்களை அமைத்தல்

மாகாண சபைத் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் மாவட்டத்தில் வெற்றிபெறும் அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு போனஸ் ஆசனங்கள் வழங்கப்படும். எவ்வாறாயினும் இத்தேர்தலில் வெற்றி பெறுவோருக்கு போனஸ் ஆசனங்கள் வழங்கப்படமாட்டாது. ஆகவே, ஏதேனும் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக்குழு அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவது அரிதாகும்.

## II. வெற்றிபெற்ற அரசியல் கட்சியின் செயலாளர் உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவரை நியமித்தல்

அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு ஆசன எண்ணிக்கையில் ஐம்பது சதவீதத்திற்கு அதிகமாக வென்றுள்ள சந்தர்ப்பத்தில்

உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் உறுப்பினர்களில் நகர முதல்வர், பிரதி நகர முதல்வர், தவிசாளர், உப தவிசாளராக யார் யார் நியமிக்கப்பட வேண்டுமென்பதை பெயர் குறித்து நியமிக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவால் வெற்றிபெற்ற அரசியல் கட்சியிடம் அல்லது சுயேச்சைக் குழுவிடம் கோரப்படும். அவ்வாறு பெயர் குறித்து அனுப்பப்பட்டுள்ளதன்படி தேர்தல் ஆணைக்குழுவால் நகர முதல்வர், பிரதி நகர முதல்வர், தவிசாளர், உபதவிசாளர் நியமிக்கப்படுவர்.

## III. உறுப்பினர்களின் வாக்களிப்பின்மூலம் உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவர் நியமிக்கப்படுவார்.

ஏதேனும் ஓர் உள்ளூராட்சி மன்றத்தில் எந்தவோர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக்குழு உள்ளூராட்சி நிறுவனத்தின் உறுப்பினர் எண்ணிக்கையில் ஐம்பது சதவீதத்திற்கும் குறைவான ஆசனங்களைப் பெற்றுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் தெரிவான உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு ஒரு வார காலத்தினுள் உள்;ராட்சி ஆணையாளர் எழுத்திலான அறிவித்தல் ஒன்றின்மூலம் சம்பந்தப்பட்ட உள்;ராட்சி நிறுவனத்தின் முதலாவது கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும்.

## IV. உள்ளூராட்சி நிறுவனமொன்றில் அதன் தலைவர் அல்லது இருவர் இராஜனாமா செய்துள்ள ஒரு சந்தர்ப்பத்தில்

உள்ளூராட்சி நிறுவனமொன்றில் நகர முதல்வர் அல்லது தவிசாளர் இராஜினாமா செய்துள்ள சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக்குழுவின் செயலாளரிடம் பொருத்தமான ஒருவரை நியமிக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலரினால் கோரப்படும்.

இரண்டாவது முறையாக நியமிக்கப்பட்ட குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின்

தலைவரும் இராஜினாமா செய்வாராயின் குறித்த உள்ளூராட்சி நிறுவனம் கலைக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனமாகக் கருதப்படுவதுடன், உரிய உளராட்சி

நிறுவனத்திற்குரிய பிரதேசத்தில் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான

அமைச்சரால் அந்த உள்ளூராட்சி நிறுவனத்திற்கான விசேட ஆணையாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

## V. உள்ளூராட்சி நிறுவனங்களில் வெற்றிடங்களை நிரப்புதல்

உள்ளூராட்சி நிறுவனத்தில் வெற்றிடம் ஒன்று ஏற்படும்போது அற்கான ஒருவரை பெயர் குறித்து நியமிக்குமாறு தேர்தல் ஆணைக்குழுவால் வெற்றிடம் காணப்படும் அரசியல் கட்சியின் செயலாளருக்கு எழுத்துமூலம்கப்படும். அதன்படி,

உள்ளூராட்சி கட்டளைச் சட்டத்தின் 8ஆம் பிரிவிலுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஒருவரை செயலாளர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும். வெற்றிடமான நபரின் எஞ்சிய பதவிக் காலத்தை நியமிக்கப்படும் நபர் வகிப்பார். வெற்றிடமாகும் நபர் ஒரு பெண் உறுப்பினராயின் நியமிக்கப்படுபவர் பெண் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

# 10.
# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுடன் தொடர்புடைய தவறுகளும் ஊழல் நடவடிக்கைகளும்

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுடன் தொடர்புடைய தவறுகள் மற்றும் ஊழல் நடவடிக்கைகளை பல்வேறு சட்டங்கள் மூலம் இனங்காணலம். அவையாவன,

I. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தவறுகள்.
II. உள்ளூர்அதிகார சபைகள் தேர்தல் சட்டத்தின கீழான தவறுகள்.
III. தண்டனைச் சட்டக்கோவையின் கீழான தவறுகள்.
IV. தாபன விதிக்கோவையின் கீழான தவறுகள்.

## I. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் தவறுகள்

தேர்தலொன்றில் பொதுச் சொத்துக்களை தேர்தல் பிரசாரத்திற்காகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டென அரசியலமைப்பின் 104(அ) உறுப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, (4) (அ) தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற கால எல்லைக்குள் அரசாங்கத்திற்கோ அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்கோ சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையாத ஆதனமொன்றை

i. தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளர் அல்லது கட்சி அல்லது சுயேச்சைக்குழு தேர்ந்தெடுக்கப்படுவதை ஊக்குவிக்கக்கூடிய அல்லது தடுக்கக்கூடிய வகையில் பயன்படுத்துதல்,

ii. தேர்தலொன்றில் போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளர் அல்லது கட்சி அல்லது சுயேச்சைக்குழு பயன்படுத்துவதை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின்படி, ஆணைக்குழுவின் தலைவர் அல்லது தேர்தல் ஆணையாளர் நாயகத்தின் எழுத்திலான கட்டளை மூலம் தடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு.

(ஆ) அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல், அத்தகைய ஆதனம் அப்போதைக்கு எவரின் பொறுப்பில் அல்லது கட்டு ப்பாட்டில் உள்ளதோ அவ்வாறான ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

தேர்தல் ஆணைக்குழுவின் இத்தகைய பணிப்புகளுக்கு அமைவாக செயற்படாமை தவறாகும். அத்தகைய தவறு ஒன்றுக்கு குற்றவாளியாக்கப்படுபவர் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்தை அல்லது மூன்று ஆண்டுகளுக்கும் மேற்படாத சிறைத்தண்டனைக்கு அல்லது அவ்விரண்டுக்கும் உட்படுத்தப்படலாம்.

இதுதொடர்பாக தேர்தல் ஆணைக்குழு 2017 டிசம்பர் மாதம் 04ஆம் திகதி 2048/02 இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் "தேர்தல் காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தை கட்சிகள், குழுக்கள், வேட்பாளர்களை ஊக்கப்படுத்துகின்ற இன்றேல், தடுக்கின்ற நோக்கத்திற்காக அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்தும் பணிக்கு தடங்கல் ஏற்படுத்தத்தக்கதாகப் பயன்படுத்தப்படுவதைத் தடைசெய்வதற்கான பணிப்புகள்" விடுக்கப்பட்டுள்ளன.

## II. உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் சட்டத்தின் கீழான தவறுகள்

### 11.1. வாக்குச்சீட்டுகள் தொடர்பான தவறுகள்

- வாக்குச் சீட்டுக்களை அல்லது அலுவலக முறையான குறியீட்டைப் போலியாகப் புனைதல்.
- முறையான அதிகாரமின்றி வாக்குச் சீட்டு ஒன்றை எவரேனும் ஆளுக்கு வழங்குதல்.
- வாக்குச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தல்.
- அலுவலக முறையான குறியீடு இடப்பட்ட வாக்குச்சீட்டு ஒன்றை உடைமையில் வைத்திருத்தல்.
- புள்ளடியிடப்பட்ட வாக்குச் சீட்டை வாக்கெடுப்பு நிலையத்தினுள் காண்பித்தல்.
- வாக்குச்சீட்டு அல்லாத ஒரு பொருளை வாக்குப்பெட்டியினுள் இடுதல்.
- முறையான அதிகாரமின்றி வாக்குச்சீட்டு ஒன்றினை வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியே எடுத்துச்செல்லல்.
- வாக்குப்பெட்டியை அல்லது இலச்சினை இடப்பட்ட வாக்குச்சீட்டுக்களின் பொதியை முறையான அதிகாரமின்றித் திறத்தல் அல்லது அழித்தல்.
- முறையான அதிகாரமின்றி வாக்குச்சீட்டுக்களை அச்சிடுதல்.
- சட்டமுறையாக வாக்களிக்கத் தகுதியற்றவரென அல்லது தகைமையற்றவரெனத் தெரிந்துகொண்டு வாக்களித்தல்

## 11.2. தேர்தல் பிரசாரம் தொடர்பான தவறுகள்

வேட்புமனு சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து வாக்கெடுப்பு நடைபெறும் நாளுக்கு அடுத்த நாள் வரை

- ◈ அனுமதி வழங்கப்படாத இடங்களில் சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தல்.
- ◈ ஊர்வலங்கள் நடாத்துதல்.
- ◈ பொதுவீதியின் மீது சின்னத்தைக் காட்சிப்படுத்தல்.
- ◈ வீதிக்குக் குறுக்காக கொடியை அல்லது பதாகையைக் காட்சிப்படுத்தல்.
- ◈ சமய பணித்துறை அமைப்புகளில் பொதுக்கூட்டங்களை ஒழுங்கு செய்தல்.

**▣ சமய பணித்துறை அமைப்புகளில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல்.**

இவை தவிர, ஏதேனும் அரசியல் கட்சிக்கு ஆதரவளித்தல் அல்லது ஆதரவளிக்காமை தொடர்பாக சமய பணித்துறை அமைப்பொன்றிலிருந்து நீக்குதல் அல்லது சேவை நிலையத்திலிருந்து நீக்குதல் தவறாகும். இத்தகைய தவறுக்கு குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டால் குற்றப்பணம் அல்லது மறியல் தண்டனைக்குப் பதிலாக 05 வருட

காலத்திற்கு உள்ளூராட்சி நிறுவனத்திற்குத் தெரிவு செய்வதற்குத் தகைமை அற்றவராதல் வேண்டும்.

## 11.3. ஊழல் நடவடிக்கைகள்

- ◈ உயிருடன் இருக்கின்ற அல்லது இறந்துள்ள அல்லது போலி நபராகத் தோன்றி வாக்களித்தல்.
- ◈ தனது பெயர் அல்லது பெயர்களின் கீழ் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் வாக்களித்தல்.
- ◈ தனக்கு வாக்களிப்பதற்காக அல்லது வேறு ஒருவருக்கு வாக்களிப்பதைத் தடுப்பதற்காக தகாத செல்வாக்கைப் பிரயோகிக்கும் வகையிலான உபசாரம் செய்தல் அல்லது பெறல்.
- ◈ சமயக் கூட்டமொன்றில் வாக்காளர்களை ஏதேனும் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்க அல்லது வாக்களிக்காதிருக்க தூண்டுதல்.
- ◈ வாக்களித்தமை அல்லது வாக்களிக்காமை காரணமாக சமயப் பணித்துறை அமைப்பொன்றிலிருந்து விலக்கப் போவதாக அச்சுறுத்துதல்.
- ◈ வேட்பாளர் ஒருவருக்கு வாக்களித்தமை அல்லது வாக்களிக்காமையினால் ஒரு தொழில்தருநர் தொழிலை முடிவுறுத்துவதாக அல்லது முடிவுறுத்தப்போவதாகப் பயமுறுத்துதல்.
- ஜ வாக்களித்தமை அல்லது வாக்களிக்காமைக்கான இலஞ்சம்.

## 11.4. வாக்கெடுப்பு நாளில் தடைசெய்யப்பட்டுள்ள செயற்பாடுகள்

வாக்கெடுப்பு நிலையத்தின் வளவினுள் அல்லது அதன் வாசலிலிருந்து அரைக் கிலோமீற்றர் தூர எல்லைக்குள் -

1. வாக்களிக்குமாறு இரந்து கேட்டல்.
2. ஏதேனும் குறிப்பான அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்க வேண்டாமென வாக்காளரை வசப்படுத்தல்.
3. துண்டுப் பிரசுரம் விநியோகித்தல் அல்லது வேறு வகையிலான பிரசார நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

மேலும், தேர்தல் அலுவலர்களுக்கு அல்லது வாக்கெடுப்பு நிலையத்தில் சமுகமாயிருப்பவரர்களுக்குத் தொந்தரவாக அமையும் விதத்தல் வாக்கெடுப்பு நிலையத்தினுள் அல்லது அதன் வாசலில் அல்லது அதற்கு அயலில் ஏதேனும் பொது இடத்தில் அல்லது தனியார் இடத்தில் ஏதேனும் ஒலிபரப்பியை அல்லது ஒலிபெருக்கியை அல்லது மனித குரலை பெருமமாக்குவதற்கான அல்லது மீளாக்குவதற்கான வேறு உபகரணத்தைப் பயன்படுத்துதல் கூடாது.

வாக்கெடுப்பு நிலையத்தின் வளவினுள் அல்லது அதன் வாசலில் ஒழுங்கீனமாக செயற்படுதல் கூடாது.

## 11.5. தேர்தல் ஆணைக்குழுவுக்கு வாக்கெடுப்பு நிலையமொன்றில் நடாத்தப்பட்ட வாக்கெடுப்பு வறிதானதாக அறிவிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள்.

(2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டத்தில் திருத்தப்பட்டவாறான 72 அ பிரிவு)

◈ வாக்கெடுப்பைத் தொடங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்கெடு-ப்பைத் தொடங்குவதற்கு இயலாத சந்தர்ப்பத்தில்.

◈ வாக்கெடுப்பை நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் தொடங்கி வாக்கெடுப்பு முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரம் வரை தொடர்ந்து நடத்திச் செல்ல முடியாத சந்தர்ப்பத்தில்.

◈ தலைமைதாங்கும் அலுவலரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் காரணத்துக்காக வாக்கெடுப்பை நடாத்த முடியாத சந்தர்ப்பத்தில்.

- ◈ வாக்கெடுப்பின் போதான ஒரு குழப்பத்தினால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாக்கெடுப்பு முகவர்கள் அச்சுறுத்தப்படும், கொல்லப்படும் அல்லது வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து துரத்தப்படும் சந்தர்ப்பத்தில்.

- ◈ வாக்கெடுப்பு பணியாட்தொகுதியினர் வழியில் ஏதேனும் முட்டுக்கட்டைகள் காரணமாக வாக்கெடுப்பு நிலையத்தை வந்தடைய முடியாத சந்தர்ப்பத்தில்.

- ◈ வாக்கெடுப்பு நிலையத்தில் அமைதியைக் குழப்பும் ஏதேனும் செயற்பாட்டி னால் வாக்கெடுப்பை நடத்த இயலாத சந்தர்ப்பத்தில்.

- ◈ எவரேனும் ஆள் பலவந்தமாக வாக்குப்பெட்டியினுள் வாக்குச் சீட்டுகளை இட்டுள்ள சந்தர்ப்பத்தில்.

- ◈ ஏதேனும் வாக்கெடுப்பு நிலையத்தில் உண்மையான, சுதந்திரமான, நியாயமான மற்றும் இரகசியமான வாக்கெடுப்பை நடத்த இயலாத சந்தர்ப்பத்தில்.

இதுபோன்ற ஏதேனும் ஒரு சம்பவம் வாக்கெடுப்பு நிலையமொன்றில் நிகழ்ந்தால், சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர் உடனடியாக அதனை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டும். தேர்தல் ஆணைக்குழுவால் அதுபற்றிய விசாரணையொன்றை மேற்கொண்டு உரிய வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்கெடுப்பு வறிதானதாக அறிவிக்கப்படும்.

தேர்தல் ஆணைக்குழு இந்த விசாரணையின்போது பின்வரும் அறிக்கைகளை கவனத்தில் கொள்ளும். சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலரின் அறிக்கை, உதவி தெரிவத்தாட்சி அலுவலரின் அறிக்கை, வாக்கெடுப்பு நிலையத்தில் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் அறிக்கை, வாக்கெடுப்பு நிலைய முகவர்களின் அறிக்கை மற்றும் சுயாதீன தேர்தல் அவதானிப்பாளர்களின் அறிக்கை.

## III. தண்டனைச் சட்டக் கோவையின் கீழான தவறுகள்

தண்டனைச் சட்டக் கோவையின் அத்தியாயம் ix(அ) இல் வாக்கெடுப்பின் போதான தவறுகள் இடம்பெற்றுள்ளன. அதன்படி பின்வரும் செயற்பாடுகள் தவறாகும்.

- ◈ இலஞ்சம் – எவரேனும் வேட்பாளருக்கு வாக்களிக்கும் பொருட்டு காணிக்கை அல்லது வெகுமதிகளை வழங்குதல் அல்லது பெறுதல்.

- ◈ வாக்கெடுப்பின்போது தகாத செல்வாக்கு – வாக்காளர் ஒருவர் சுதந்திரமாக வாக்களிப்பதற்குத் தொந்தரவாக அமையும் வகையில் அச்சுறுத்துதல் அல்லது அழுத்தம் பிரயோகித்தல்.
- ◈ வேறு நபராக தோன்றுதல் – உயிருடன் இருக்கின்ற அல்லது இறந்துள்ள நபர் சார்பாக தோன்றி வாக்களித்தல்.

## IV. தாபன விதிக்கோவையின் கீழான தவறுகள்

- ◈ மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் உரிமைகளைக் கொண்ட அலுவலர்கள் பிரசாரங்களில் ஈடுபடல்

தாபன விதிக்கோவையின் xxxii அத்தியாயத்தின்படி, பதவிநிலை தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு வாக்களிப்பது தவிர்ந்த, கூட்டங்களில் கலந்துகொள்ளுதல் மற்றும் எந்தவோர் உறுப்பினரின் அல்லது கட்சியின் பிரசார நடவடிக்கையுடன் இணைந்து கொள்ளுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும், சமாதான நீதவான்கள், ஆயுதந்தாங்கிய படைகளிலுள்ள பணியாளர்கள் மற்றும் தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்களும் இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் உரிமைகள் கொண்ட பணியாளர்களின் பட்டியலில் அடங்குவர். இவ்வாறானவர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுதல் கூடாது.

# 11

# உள்ளூராட்சி உறுப்பினர்களின் கடமைகள்

## உள்ளூராட்சி நிறுவனங்களின் சட்டப் பின்னணி

உள்ளூராட்சி நிறுவனங்கள் அதனுடன் தொடர்புடைய சட்டங்களால் தாபிக்கப்பட்டுள்ளன. அதன்படி 03 உள்ளூராட்சிச் சட்டங்கள் காணப்படுகின்றன.

- ◈ 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்
- ◈ நகர சபைகள் சட்டம் அத்தியாயம் 255
- ◈ மாநகர சபைகள் சட்டம் அத்தியாயம் 252

உள்ளூராட்சி நிறுவனமொன்றின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் அதனுடன் இணைந்த அடிப்படைச் சட்ட நிலைமைகள் இச்சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி நிறுவனங்கள் சட்ட ரீதியான அமைப்புகள் என்பதால் அவைதம் பெயரில் வழங்குத் தொடர அல்லது தொடுக்க முடியும்.

## உள்ளூராட்சி நிறுவனத்தின் கட்டமைப்பு

மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபை உள்ளூராட்சி நிறுவனத்தின் அதிகாரம் வாய்ந்த அலகாகும். உள்ளூராட்சி நிறுவனத்தின் அதிகார மையமாக சபை காணப்படும். மக்கள் பிரதிநிதிகளிடையே மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான நபர் அல்லது ஆளும் கட்சியால் நியமிக்கப்படும் நபர் நகர முதல்வர் / தவிசாளராகத் தெரிவு செய்யப்படுவதோடு, அவரின் உதவியாள் உப நகர முதல்வர் / உப தவிசாளராகத் தெரிவுசெய்யப்படுவார். தவிசாளரும் உப தவிசாளரும் ஆளும் கட்சியிலிருந்து தெரிவு செய்யப்படுவதோடு, எதிரணியின் தலைவர் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பார். சபையின் பிரதான நிருவாக உத்தியோகத்தராக உள்ளூராட்சி அமைச்சினால் நியமிக்கப்படும் நகர ஆணையாளர் / செயலாளர் காணப்படுவார். மக்கள் பிரதிநிதி அல்லாத இவர் ஓர்அரசாங்க உத்தியோகத்தராவார். இவரின் கீழ்உள்ளூராட்சி நிறுவனத்தின் பதவியணி செயற்படும்.

### i. நகர முதல்வர் / தவிசாளர்

நகர முதல்வர் / தவிசாளர் உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவராக இருப்பார். சபை அமர்வு ஒவ்வொன்றுக்கும் தலைமை தாங்குபவரும் இவரே. விசேட கூட்டங்களைக் கூட்டுவதற்கான தேவையுள்ளதெனக் கண்டறியும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அக்கூட்டத்தைக் கூட்டுவதற்கான அதிகாரம் நகர முதல்வருக்கு / தவிசாளருக்கு உண்டு. அதேபோல், கூட்டங்களைக் கூட்டுதல் பற்றிய சகல அதிகாரங்களும் நகரமுதல்வர் / தவி2சாளருக்கே உரியது.

உள்ளூராட்சி நிறுவனத்தின் வரவு செலவுத் திட்டம் நகரமுதல்வரால் / தவிசா-

ளரால் சமர்ப்பிக்கப்படும். உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய ஆரம்பச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமாக மத்திய சுற்றாடல் அதிகார சபைச் சட்டம், உணவுச் சட்டம் போன்ற பிற சட்டங்களாலும் அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

### ii. உப நகர முதல்வர் / உப தவிசாளர்

நகர முதல்வர் / தவிசாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் கூட்டங்களுக்குத் தலைமைதாங்கி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு உப நகர முதல்வர் / உபதவிசாளருக்கு உரியது.

### iii. எதிர்க்கட்சித் தலைவர்

உள்ளூராட்சி நிறுவனத்தில் எதிரணியைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிக-ளிடையே ஏகோபித்த ஆதரவைப் பெற்றவர் எதிர்க்கட்சித் தலைவராக விளங்குவார். இப்பதவி தொடர்பாக சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. இருப்ப-னும், சகல மக்கள் பிரதிநிதிகளும் உள்;ராட்சி நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக கூட்டாக இணைந்து செயல்பட வேண்டுமெ-ன்பது இதன் பொருள்.

### iv. நகர ஆணையாளர் / செயலாளர்

மாநகர சபைகளின் பிரதான நிருவாக உத்தியோகத்தராக நகர ஆணையாளர் செயற்படுவார். நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் பிரதான நிருவாக

உத்தியோகத்தர் அதன் செயலாளராவார். இவர் உள்ளூராட்சி அமைச்சின் உதவி ஆணையாளரது நேரடிக் கண்காணிப்பின்கீழ் இயங்குவார். சபையிலுள்ள பதவியணியின் தலைவராக இருப்பவர் நகர ஆணையாளர் / செயலாளர் ஆவார். மாநகர சபைக் கூட்டங்களை ஒழுங்கு செய்யும்போது அதில் ஆராடயப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆணையாளர் / தவிசாளரை அறிவுறுத்தும் பொறுப்பு செயலாளரைச் சாரும். மேலும், கூட்ட ஒழுங்குப் பத்திரத்தைத் தயாரித்தல், சபையில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் மற்றும் விபரங்களை உறுப்பினர்களுக்கு விநியோகித்தலும் இவரின் பொறுப்பாகும்.

## உள்ளூராட்சி நிறுவனங்களின் பணிகள்

உள்ளூராட்சி நிறுவனங்கள் தம் விடயப்பரப்புக்குரிய விடயங்களுக்கான துணை விதிகளை ஆக்கி அவற்றைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தல் உள்ளூராட்சி நிறுவனங்களின் முக்கிய பணியாகும். அதேபோல், வருடாந்த அபிவிருத்தித் திட்டத்திற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து அங்கீகரி-த்தலும் இதில் அடங்கும். அவை தவிர, உள்;ராட்சி உறுப்பினர்களுக்கு கீழ்க்க-ாணும் பணிகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி நிறுவனத்திற்குரிய நிருவாக மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு மக்களின் பங்கேற்பைப் பெற்றுக்கொள்ளுதல்.

- பொது சுகாதாரம்
- பொது பயன்பாட்டுச் சேவைகள்
- பொது வழிகளைப் பராமரித்தலும் அபிவிருத்தி செய்தலும்
- உரிமக் கட்டண அறிவீடு
- வரி அறவீடு
- தருமக் கொடுப்பனவு
- இறங்குதுறைகளை அமைத்தல்
- மத, கலாசார நிகழ்வுகள்
- குடிநீர் வழங்கல்
- பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கான தொழில் வாய்ப்புத் திட்டங்களைத் தயாரித்தல்

## உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரங்கள்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சம்பந்தப்பட்ட ஆரம்பச் சட்டத்திலும் மற்றும் சில சட்டங்களாலும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அதன்படி உள்ளூராட்சிச் சட்டத்தின் கீழ் வீத வரிகளையும் வரிகளையும் அதேபோல், சபையின் ஆளுகைப் பிரதேசத்திலுள்ள காணிகளை பகிரங்க தேவை கருதி அளக்கவும் சுவீகரிக்கவும் முடியும். பிற நிறுவனங்களால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் காரணமாக பிரதேச சபையின் அதிகாரங்கள் பொதுமக்களுக்கு மிகவும் நெருக்கமானவையாக உள்ளன.

- ❖ சுற்றாடல் உரிமங்களை விநியோகிக்கும் அதிகாரம்
- ❖ கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கும் அதிகாரம்
- ❖ விலங்கறுமனைகளுக்கான உரிமம் வழங்கல்
- ❖ தொல்லைகளை அகற்றும் அதிகாரம்
- ❖ கட்டட நிர்மாணங்களை சோதனையிடும் அதிகாரம்
- ❖ பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் கட்டடங்களையும் மரங்களை ளயும் அகற்றும் அதிகாரம்

**உள்ளூராட்சி நிறுவனமொன்றில் மக்களின் பங்கேற்பு**

உள்ளூராட்சி நிறுவனங்கள் பிற நிறுவனங்களை விட அதிகமான மக்கள் பங்கே-ற்பை எதிர்பார்க்கின்றன. குழு முறை அதற்கான மிகச்சிறந்த முறையாக

உள்ளது. அதன்படி, உள்ளூராட்சி நிறுவனங்களில் சபைக்கு ஆலோசனை கூறுவதற்காக அமைக்கப்படும் குழுக்களில் உறுப்பினர்களுக்கு மேலதிகமாக பொதுமக்களைப் பங்குபெறச் செய்யும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

**உள்ளூராட்சி உறுப்பினரின் வகிபங்கு**

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளுக்கமைய உள்;ராட்சி நிறுவனங்களில் மக்கள் பிரதிநிதிகளின் வகிபங்கு தீர்மானிக்கப்படுகிறது. ஒருவரின் பிறப்புத் தொடக்கம் இறப்பு வரை மிக முக்கியமான

செயற்பாடுகளில் உள்ளூராட்சி நிறுவனத்தின் பங்கு மிக அதிகமானது. எனவே, சகலவிதமான பொறுப்புக்களையும் நிறைவேற்றும்போது சம்பந்தப்பட்ட

உள்ளூராட்சி நிறுவனத்தின் ஆளுகைப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் மற்றும் வரி செலுத்துபவர்களின் தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்து வரும் தேர்தலில் 60% பிரதிநிதிகள் வட்டார முறையில் தெரிவாவதால் சம்பந்தப்பட்ட பிரதிநிதியின் வட்டாரத்திலுள்ள மக்களின் தேவைகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

# 12

# உள்ளூராட்சி பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கான அளவுகோல்கள்

பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனத்திற்கு மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும்போது வாக்காளர்கள் மிகவும் கவனமாக செயல்பட வேண்டும். தகுதியில்லாத ஒருவர் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டால், அது தமது வட்டாரத்திற்கு மட்டுமன்றி உள்;ராட்சி நிறுவனத்திற்கும் பொதுவாக நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

குறிப்பாக, இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் வட்டாரத்திற்கு பொறுப்புகூறும் பிரதிநிதி ஒருவர் கிடைப்பதால் தமது பிரதிநிதி தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய முக்கியத்துவம் அதிகரித்துள்ளது.

## i. கட்சி தகுதியானவர்களுக்கு வேட்புமனு வழங்குதல்

புதிய உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளர்களுக்கு வேட்பாளர்களைத் தெரிவு செய்யவுள்ள வாய்ப்பு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. வாக்காளர்கள் குறித்த அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு உரிய வட்டாரத்திற்கென நியமித்துள்ள வேட்பாளர்களிலிருந்து பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும். மாறாக, உள்ளூராட்சித் தொகுதிக்கென நியமித்துள்ள வேட்பாளர்களில் ஒருவரைத் தெரிவு செய்யவிருந்த வாய்ப்பு இம்முறை அற்றுப்போயுள்ளது. ஆகவே, தகுதியானவர்களுக்கு வேட்புமனு வழங்குவது தொடர்பில் அரசியல் கடசிகளின் பொறுப்பு அதிகரித்துள்ளது.

வேட்புமனு வழங்கும்போது அரசியல் கட்சிகள் பின்பற்ற வேண்டி பொதுவான 08 அளவுகோல்களை பற்றி மார்ச் 12 இயக்கம் 2015இல் அறிமுகஞ் செய்துள்ளது. இந்த அளவுகோல்களுக்கு சகல அரசியல் கட்சிகளும் இணம் தெரிவித்துள்ளன.

**இணக்கம் தெரிவித்துள்ள அளவுகோள்களாவன –**

- ◈ குற்றவியல் சார்ந்த தவறொன்றுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அல்லது இடைநிறுத்திய சிறைத்தண்டனைகளுக்கு உள்ளாக்கப்படாத ஒருவராக இருத்தல் வேண்டும்.

- ❖ குற்றவியல் சார்ந்த தவறொன்றுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அல்லது இடைநிறுத்திய சிறைத்தண்டனைகளுக்கு உள்ளாக்கப்படாத ஒருவராக இருத்தல் வேண்டும்.

- ❖ இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பில் குற்றவாளியாக்கப்படாத, சமூக அங்கீகாரம் பெற்ற, நன்னடத்தையுள்ள ஒருவராக இருத்தல் வேண்டும். அதேபோல், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களுக்கு உள்ளானவர்கள் பற்றி விழிப்படன் இருத்தல் வேண்டும்.

- ❖ மதுசாரம், போதைப்பொருள், சூது, கசினோ, விலைமாதர் விடுதி உட்பட நாட்டின் நல்லிருப்பிற்குப் பங்கம் விளைவிக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த அல்லது ஈடுபட்டுவரும் ஒருவராக இராதிருத்தல்.

- ❖ உயிர்மூலக் கட்டமைப்பைச் சிதைத்துவிடும் சுற்றாடல் ரீதியாக தீங்கு பயக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த அல்லது ஈடுபட்டு வரும் ஒருவாக இராதிருத்தல்.

- ❖ அரசியல் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாத ஒருவராக இருத்தல்.

- ❖ மக்கள் பிரதிநிதி ஒருவராவதற்கு முன் நாட்டிற்கு பின்னடைவை ஏற்படுத்தக்கூடிய நிதிசார் ஒப்பந்தங்களைச் செய்துகொண்ட மற்றும் மக்கள் பிரதிநிதி ஒருவராக இருந்துகொண்டு தமது அரசியல் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து அரசாங்கத்துடன் நிதிசார் ஒப்பந்தங்களைச் செய்துகொண்ட அல்லது அத்தகைய ஒப்பந்தமொன்றின் தரப்பினர் ஒருவராக இராதிருத்தல்.

- ❖ வேட்புமனு கையளிக்கின்ற வேட்பாளர் தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பகுதியின் குடியிருப்பாளர் ஒருவராக அல்லது அம்மக்களுடன் உறவைப் பேணும் ஒருவராக இருத்தல்.

- ❖ வேட்புமனு வழங்கும்போது பெண் மற்றும் இளம் பிரதிநிதிகளுக்கு போதிய வாய்ப்பை வழங்கக்கூடிய விதத்தில் செயலாற்ற வேண்டும்.

### ii. பிரஜைகள் அரசியல் கட்சிகளுக்கு பிரயோகிக்கக்கூடிய அழுத்தங்கள்

அரசியல் கட்சிகள் மேலே சொல்லப்பட்டுள்ள அளவுகோல்களை அரசியல் கட்சிகள் தாமாகவே முன்வந்து பின்பற்றுமென நினைப்பது மூடநம்பிக்கை. ஆகவே, அரசியல் கட்சிகளுக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும்.

**பின்வரும் அழுத்தங்களை பிரயோகிக்கலாம்.**

- தகுதியானவர்களுக்கு மட்டும் வேட்பமனு வழங்குமாறு

- தமது கட்சி தகுதியானவர்களை தேர்தலில் நிறுத்தத் தவறுமானால், தகுதியான வேட்பாளர்களை நிறுத்தியுள்ள அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிக்குமாறு பிரதேச அரசியல் தலைமைத்துவத்தை அறிவுறுத்தல்.

- ஊழல் புரிந்தவர்களுக்கு வேட்புமனு வழங்கப்படுவதை எதிர்த்தல்.

- தமது கிராமத்திற்கு சேவை செய்யக் கூடிய திறமையான மற்றும் நேர்மையான வேட்பாளரை கட்சிபேதமின்றி ஆதரித்தல்.

- அதிகரிக்கப்பட்டுள்ள பெண்கள் பிரதிநிதித்துவத்தின் உண்மையான பலனைப் பெற்றுக்கொள்ள சிறந்த மற்றும் ஆற்றல் மிக்கவர்களை பட்டியலில் உள்ளடக்குமாறு தமது தலைமைத்துவத்திற்கு அழுத்தம் கொடுத்தல்.

- மரண சகாய சங்கங்கள், இளைஞர் சங்கங்கள் போன்ற சமூகத்தில்

  இயங்கும் சன சமூக அமைப்புகளிலும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர் பாக கலந்துரையாடுதல்.

- கட்சிபேதமின்றி தகுதியானவரை மட்டும் உங்கள் கிராமத்திற்கு தலைவராக தெரிவு செய்யுங்கள்.

- புதிய அரசியல் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக பொறுப்பு வாய்ந்த ஒரு பிரஜை என்ற வகையில் முழுமையான பங்களிப்பை வழங்குங்கள்.

- பெண்களுக்கு 25□ கட்டாய பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளபோதும், திறமை மற்றும் ஆற்றலுள்ள பெண்களுக்கு வட்டாரத்தில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென

- உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தில் கொண்வரப்பட்டுள்ள திருத்தங்களின்படி இளைஞர்களின் பிரதிநிதித் துவம் கட்டாயமில்லா தபோதும், இளைஞர்களுக்கு போதிய வாய்ப்பினை வழங்க வேண்டுமென

எவ்வாறாயினும், வாக்கெடுப்பு நாளன்று தாம் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்ற நியாயமான முடிவுக்கு வரவேண்டுமானால் மார்ச் 12 இயக்கம் அறிமுகஞ் செய்துள்ள “உங்கள் வாக்கு பெறுமதியானது – வாக்களிக்க முன் வேட்பாளர்களுக்கு புள்ளிகள் வழங்குவோம்” எனும் புள்ளி வழங்கும் அட்டையை ஏற்புடையதாக்கிக் கொள்ளலாம்.

உங்கள் வாக்கு பெறுமதியானது. - வாக்களிக்க முன் வேட்டாபாளர்களுக்கு புள்ளிகள்

| அரசியல் கட்சி / சுயேச்சைக் குழு | உங்கள் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் | நியாயமான முறையில் பணம் சம்பாதிப்பவர் | அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தாதவர் | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகாதவர் | நீங்கள் எப்போதும் சந்திக்கக் கூடிய நெருக்கமான ஒருவர் | சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படுத்தாதவர் | சமூக சேவையாற்ற சிறந்தவர் | சகல இன, மத மற்றும் கலாசாரத்தை மதிப்பவர் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

ஒவ்வொரு நியதிபடி வேட்பாளருக்கு புள்ளி வழங்கும் முறை

| | |
|---|---|
| மிக நன்று | 08 – 10 |
| நன்று | 05 – 07 |
| சாதாரணம் | 02 – 04 |
| பலவீனம் | 00 – 02 |

ஒவ்வொரு வேட்பாளருக்கும் உரிய மொத்தப் புள்ளிகளை கணித்து மிகப் பொருத்தமான வேட்பாளரைத் தெரிவு செய்யுங்கள்

சாதுரியமாக வாக்களிப்போம். உங்கள் உள்ளூர் அதிகார சபைக்குத் தகுதியானவர்களை மட்டும் தெரிவுசெய்வோம்.

மார்ச்சு 12 இயக்கத்தின் செய்தி

தனிப்பட்ட பாவனைக்கு மட்டும்.

பூர்த்தி செய்த அட்டைகளை கைமாற்ற வேண்டாம்

## අපේක්ෂකයින්ට නාම යෝජනා ලබාදීමේදී දේශපාලන පක්ෂ සලකා බැලීමට එකඟ වූ පොදු නිර්ණායක

அரசியல்வாதிகளுக்கு வேட்புமனு வழங்கும் போது கருத்திற்கொள்வதற்கு அரசியல் கட்சிகள் இணங்கிய பொதுவான அளவுகோல்கள்

COMMON CRITERIA AGREED BY POLITICAL PARTIES TO CONSIDER WHENGIVING NOMINATION



අපරාධ කරුවෙකු නොවන
குற்றவாளியற்ற
SHOULD NOT BE A CRIMINAL




බලය අවභාවිත නොකරන
அதிகாரத்தை பிழையாக பயன்படுத்தாத
NOT ABUSING AUTHORITY




අල්ලස් හෝ දූෂණයෙන් තොර
இலஞ்ச ஊழலில் ஈடுபடாத
FREE OF BRIBERY & CORRUPTION




අයතු මූල්‍ය ගිවිසුම්වලින් තොර
ஊழல் நிறைந்த நிதி உடன்படிக்கைகளில் ஈடுபடாத
FREE OF ABUSIVE FINANCIAL CONTRACTS



සමාජ විරෝධී ව්‍යාපාරයන්ගෙන් තොර
சமூகத்திற்கு ஒவ்வாத வியாபாரங்களில் ஈடுபடாத
FREE OF ANTI-SOCIAL TRADES



ඡන්දදායකයින්ට සමීප
வாக்காளரால் இலகுவில் அணுகக்கூடிய
CLOSE TO ELECTORS



පරිසර හිතකාමී
சுற்றாடலை பேணும்
ENVIRONMENT FRIENDLY



ප්‍රමාණවත් කාන්තා හා තරුණ නියෝජනය
போதுமான பெண்கள் இளைஞோர் பிரதிநிதித்துவத்திற்கான
OPPORTUNITIES FOR WOMEN AND YOUTH

பஃப்ரல் வெளியீடு
12/3,
றொபட் ரெரஸ், றொபட் ரெரஸ்,
கொழும்பு 06.
தொலைபேசி - 011 2514441/2
தொலைநகல் - 011 2514443
மின்னஞ்சல் - paffrel@sltnet.lk
இணையத்தளம் - www.paffrel.lk

9 789554 082038